உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௭.] விக்கிரம௵ சித்திரைமீ [பகுதி-௬.

Vol. 37. April – May 1940. No. 6.

## பரதாழ்வான் வைபவம்.

[உகரு-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இனி, ஸ்ரீராமபிரானிடம் நியமனம்பெற்றுக்கொண்டு கேகய நாடு சென்றிருந்த பரதாழ்வானை அயோத்திக்கு அழைத்துவரும் பொருட்டுச் சென்றடைந்த தூதுவரை,

'போருவில் தூதுவர் போயினர் பொய்யிலார்'*

என்கிறார் கவி.

இதனுள், போருவில் தூதுவர் என்றதன் கருத்து: அவர் அரசவையிற்சென்று பேசுதற்குரிய கல்வி அறிவு ஆற்றல் குறிப்பறிதல் சொல்வன்மை முதலிய தூதுவர்க்குரிய இலக்கணங்களால் ஒப்புயர்வற்றவர் என்பதாம்.

இதனால் அவர் பரதாழ்வானுடைய மனக்குறிப்பறிந்து கொள்ளவும், அதற்கேற்றவாறு விடையளிக்கவும் தகுதியுடையவர் என்பது போதரும்.

இன்னும், அவரைப் பொய்யிலார் என்றதன் குறிப்பு: அவர் சொல்லியது பொய்யேயாயினும், அது,

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"— (வள்ளுவர். 292.)

* பள்ளியடைப்படலம். செய்யுள். 1.

என்னும் வாய்மைக்குரிய இலக்கணமுடையதாய்ப் பரதாழ்வானை அப்போது தன்புருவகைசெய்து, புரைதீர்ந்த நன்மைபயத்தலால் அவர் சொல்லியது பொய்யில்லையென்பதாம்.

இதனை இனிச் சொல்லப்புகும் தூத பரத சம்பாஷணத்துக்கு ஒரு முன்னுரையாகச் சொல்லி உலகியலறநெறியொழுக்கங்காட்டிய மஹாகவி, பரதாழ்வான் தூதரைநோக்கி,

'"தீதிலன்கோல்? திருமுடியோன்" என்றான்'*

என்கிறார்.

இங்கு, திருமுடியோன் என்ற குறிப்பால் உலகம்புரக்குந்திறனும் செல்வமும் உடைய பேரரசன் என்பதாயிற்று. ஆகவே, அவனையும் அவனால் புரக்கப்படும் உலகையும் கேடின்மைபற்றி வினவினான்: என்பதாம்.

அரசனைத் திறல்கொண்டு வலியனோ? என்றேனும், ஆக்கங்கொண்டு நல்வாழ்வுளனோ? என்றேனும் வினவாது, கேடின்மையொன்றேகொண்டு தீதிலன்கோல் என்று வினவியதனால், இவ்வுலக வாழ்க்கையில் எத்துணை உயர்வுடையோர்க்கும் நன்மைவிளைதல் அரிதாயும் தீமைவிளைதலே பெரிதாயும் இருத்தலால் அத்தீமைகள்† விளையாதிருத்தலே நலம்: என்பது இவன்கருத்தாயிற்று.

அன்றியும், இவன் சில துர்நிமித்தங்கண்டு நாட்டிலுள்ளோர்க்கும் நாடாளும் அரசனுக்கும் என்ன தீங்குண்டாகுமோ என்று சஞ்சலமுற்றிருந்தான்; அது தெளியவேண்டியும் தீதிலன்கோல்? என்று கேடின்மைகொண்டு வினவினான்: என்னவும் ஆம்.

இவற்றால் இவனெழுகும் மெய்ந்நெறியொழுக்கிற்கு உறுப்பான உலகவாழ்க்கையிற் பற்றின்மையும், அரசாட்சியில் அவாவின்மையும், நாடும் அரசனும் தீங்கின்றிவாழவேண்டுமென்னும் அருளுடைமையும் தோன்றுகின்றன.

இங்ஙனம் பரதாழ்வான் வினவியதற்கு விடையாக,

---

* பள்ளியடைப்படலம். செய். 2.

† தீமைகளாவன: மிக்கபெயல் பெயலின்மை முதலிய நாட்டுக் குற்றங்களான ஈதிபாதைகளும், பிணி மூப்பு சாக்காடு முதலியவற்றாலுண்டாம் பிறவித்துன்பங்களுமாம்.

'"வலியன்" என்றவர் கூற மகிழ்ந்தனன்'* என்கிறார்.

இங்கு வலியன் என்றது: படைவலி பொருள்வலி ஊழ்வலி துணைவலி முதலிய பலவகை வலிகளும் உடையான்: என்பதாம்.

இதனால் ஒரு தீங்கும் இன்றி எல்லாச்செல்வமும் உடையன் என்பது குறிப்பாயிற்று.

மகிழ்ந்தனன் என்றதன் கருத்து: அரிதின் எய்தற்பாலதாகிய ஆக்கமுடைமையறிந்து பரஸம்ருத்தியால் மகிழ்ச்சியடைந்தான்: என்பதாம்.

இங்ஙனம் இவன் உபேக்ஷைக்கிலக்காகிய அரசியலின் கேடின்மையை வினவிவிட்டு, அபேக்ஷைக்கு இலக்காய் ஒருவகையாலும் கேடில்லாத பகவத்ஸேவையைப் பெருஞ்செல்வமென்று கொண்டு,

> 'இலைகொள்பூண் இளங்கோன் எம்பிரானொடும்
> உலைவில் செல்வத்தனே?'

என்று, பகவத்ஸேவைசெய்யும் இளையபெருமாளை ஆக்கம் பற்றி வினவுகிறான்.

இதனால், இவன், உலகமுழுதும் தன் அடிதொழுமாறுபணிக்கும் முடியுடையரசர்பெருஞ்செல்வமும் வறிதென்றுசொல்லும்படியான பெருஞ்செல்வம் இராமனடித்தொழும்பென்று கருதினான்: என்பது போதரும்.

இராம(பகவத்)ஸேவையாகிய இதனை முன்பு தம்வாயால், மெய்ந்நெறி என்றார்; பின்பு விசுவாமித்திரமுனிவர்வாயால் தள்ளரிய பெருநீதி யென்றார்; இங்கு பரதாழ்வான்வாயால் உலைவில் செல்வம்: என்கிறார் மஹாகவி.

உலைவில்செல்வம்: என்றது, ஒருநாளும் அழிவில்லாமலே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் செய்தற்குரிய அசேஷ சேஷவ்ருத்தியாகிய பகவத்ஸேவையேயாம். இது,

> 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
> வழுவிலா வடிமை செய்யவேண்டும் நாம்'†

என்னும் அறிவனூற்பொருளாயிற்று.

---

* பள்ளியடைப்படலம். செய். 3. † திவ். திருவாய்மொழி. 3. 3. 1.

நன்மைபயப்பதுபற்றி, பகவத்ஸேவையைச் செல்வமென்றும், அது பொருட்செல்வம்போல அழிவுடையதன்று என்பதுபற்றி உலேவில்செல்வம் என்றும் கூறி, அச்செல்வமுடைமைபற்றி இளைய பெருமாளை உலேவில்செல்வத்தன் என்றான்.

இதனால் தீதிலன்கோல்? திருமுடியோன் என்ற உலேயுஞ்செல்வ முடைய சக்ரவர்த்தியினும், உலேவில்செல்வத்தனுயுயர்ந்தோன் இளையபெருமாள்: என்பது இவன்கருத்தாயிற்று.

இவ் வுலேவில்செல்வமான பகவத்ஸேவை, அகம்படிமை புறம் படிமை என இருவகைப்படும்.

அகம்படிமையாவது: எம்பெருமானிடமிருந்து, அவனுடுத்துக் களைந்த பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு அவனுக்கே செய்யும் அணுக்கத்தொண்டு.

புறம்படிமையாவது: அவன் விடுத்ததிசைக்கருமந்திருத்த லாகிய லௌகிககாரியம் முதலான புறத்தொண்டு.

இவற்றுள், இளையபெருமாள், தன்னைப்போல் நியமிக்கப் பெற்று, இராமபிரானைப் பிரிந்துசெய்யும் புறம்படியனுகாதே, அவனைப் பிரியாது உடனிருந்துசெய்யும் அகம்படிமையுடைய னுகவேயுள்ளானே? என்னும் கருத்துத் தோன்ற, எம்பிரானேடும் என்கிறான்.

இதனால் அகம்படிமை புறம்படிமை என்னும் இரண்டுவித மான பகவத்ஸேவையும் உலேவில்செல்வம் என்றவாறுயிற்று.

இது, இராமபிரானுக்குக் குறைவின்றி அணுக்கத்தொண்டு நடைபெற்றுவருகிறதா? என்று பகவதாராதன கைங்கர்யம்பற்றி வினவியவாறுமாம்.

இங்ஙனம் உலேவில்செல்வமான அடிமைத்திருவுடையானை இளங்கோன் என்கிறான்.

தனக்கு வயதாலும் முறையாலும் தாழ்ந்த இலக்குவனை எம்பி என்னுது, இளங்கோன் என்று, ராஜகுமாரன் என்னும் மரபு பற்றிக்கூறினுன்: என்பது உலகநூல்வழக்காகும்.

இவ்வழக்கு, பரதாழ்வான்கருத்துக்கும் இலக்குவன்புரியும் அகம்படிமைத்திறத்திற்கும் பொருந்தாததலால் இதற்கு அறிவ

னூற்பொருள் வேறும். அது, அவன் எனக்கு இளையனானாலும் கோனும் (ஸ்வாமியாய்) உள்ளவன் என்பதாம். இதன் கருத்து,

"இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்"— (வள்ளுவர். 698.)

என்னும் ஒழுகலாறு, உலையுஞ்செல்வமுடைய அரசனைநோக்கி நிகழுமாயின், உலைவில்செல்வத்தினரான அடியாரைநோக்கி நிகழுமென்பது சொல்லவேண்டுமோ? என்பதாம்.

இதனால், அடியார்க்கடிமையான பாகவதசேஷத்வமுடையோன் பரதாழ்வான்: என்பது பெறப்பட்டது.

இவ்வடியார்க்கடிமை அறிவனூற்பொருளாமாறு:

"பயிலுஞ் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனைப்
பயில வினியநம் பாற்கடற் சேர்ந்த பரமனைப்
பயிலுந் திருவுடையார் யவரேலு மவர்கண்டீர்
பயிலும் பிறப்பிடைதோ றெம்மையாளும் பரமரே." (3. 7. 1.)

என்னும் திருவாய்மொழியால் அறியத்தகும்.

இனி, இவ்விளங்கோனை, இலைகோள்பூண் இளங்கோன் என்று அவனுக்கு ஒரு ஆபரணம்பூட்டி விசேடிக்கிறான்.

இவ்விசேடணத்தால், இலைத்தொழில்கள் அமைந்த பொற்பணிபூண்டவன் இளங்கோன்: என்பது உலகநூல்வழக்கு.

இப்பொருளால், 'குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்' என்பதுபோலே பொருட்செல்வமும், அணிகலவழகும் உடையோன் இளங்கோன்: என்பது போதரும்.

இவ்வுலைவுடைய பொருட்செல்வங்கொண்டும் உடலணியழகுகொண்டும் உலைவில் (தெருட்) செல்வமுடையானைச் சிறப்பித்தல் பொருந்தாமையால், உலகநூல்வழக்கான பொற்பணிபூண்டவன் என்பதை ஒழித்து, அவனுக்குள்ள உலைவில்செல்வக் குறிப்பான அணுக்கத்தொண்டென்னும் நற்பணிபூண்டவன் என்னும் அறிவனூற்பொருளே இங்குக் கொள்ளத்தகும்.

அப்பொருளாமாறு:—

இலைகோள் பூண் இளங்கோன் என்பதனை இலைகொள் இளங்கோன், பூண் இளங்கோன்: என இருதொடராக்கி,

'கையடைக்காயும், கழுத்துக்குப் பூணொடு
காதுக்குக் குண்டலமும்,
............................தந்தென்னை
வெள்ளுயிராக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடியான்' (திருப்பல்லாண்டு. 8.)

என்கிறபடியே அவனமுதுசெய்தருளிய சேஷமாயும், அணிந்தருளிய சேஷமாயுமுள்ள அடைக்காயமுதும் ஆபரணவிசேஷங்களுமாம் இவற்றை அவனால் ப்ரஸாதிக்கப்பெற்று அவனுகந்தருளுமாறு ப்ரஸாதப்ரதிபத்தியோடு தரித்து வர்த்திக்கும் இளங்கோன்: என்பதாம். இங்கே இலை என்றது அடைமொழியின்றியே வெற்றிலையையுணர்த்திநின்றது. இது மற்றுமுள்ள பகவத்ப்ரஸாதங்களுக்கெல்லாம் உபலக்ஷணம்.

இங்கு, இலக்கணைக்குறிப்பால், பூண் என்றது பணியாய், அது பின் பணிவிடையாயிற்று: எனினுமாம். இதனால், இலைகொள் பணியான அகம்படிமையுடைய இளங்கோன்: என்பதாம்.

இப்பணிவிடையை ஆபரணமாக வழங்குதல்,

'தொண்டுபூண் டமுதமுண்ணுந் தொழும்பர்'*

என்னும் அறிவனூல்வழக்கானும் அறிக.

இனி, இலை என்றது, இராமபிரான் அமுதுசெய்த இலைத்தளிகையிலுள்ள பரிகலசேடத்துக்கு ஆகுபெயராய், அதனைக் கொள்(ளுதற்குரிய நற்பணி - பணிவிடை - அகப்படிமை) பூண் இளங்கோன்: என்பதுமாம். [இது, 'நாடுகாண்காதை' என்பதுபோல இடைநிலைதொக்கதொடராயிற்று.]

இப்பொருளினும் மஹாகவிக்குக் கருத்துண்டென்பதை, இளையபெருமான்வாக்காலே,

'பச்சிலை கிழங்கு காய் பரமன் நுங்கிய
மிச்சிலே நுகர்வது வேறு தானொன்று
நச்சிலேன் நச்சினே னுயின் நாயுண்ட
எச்சிலை நுகர்வதே ஐய மில்லையால்'†

என்று சொல்லியிருத்தலானும் அறியலாம்.

* திவ். திருமாலை. 5. † கிட்கிந்தைப்படலம். செய்யுள். 114.

திருமாலடியார் பகவத் பரிகலசேடப்ரசாதம் கொள்ளுதலை அறிவனூல்கூறுமாறு,

'உடுத்துக் களைந்தநின பீதக வாடை யுடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன சூடும் இத் தொண்டர்களோம்' (9)

என்னும் திருப்பல்லாண்டினுள், கலத்ததுண்டு என்று பணித்திருப்பதால் அறியலாம்.

இதனால், இறைவன் (இராமபிரான்) அடித்தொழும்பர்க்கு அவன் அமுதுசெய்த பரிகலப்ரசாதங்கொள்ளுதலும் இம்மெய்ந் நெறியொழுக்கிற்கு ஓர் உறுப்பாமென்று காட்டப்பட்டது..

இன்னும், இலைகோள் பூண் இளங்கோன் என்பதற்கு இலையைக்கொண்ட பூணியையுடையோன் இளங்கோன்: என்பதும் ஒரு பொருளாம்.

இப்பொருளில் 'பூவெனப்படுவது பொறிவாழ்பூ' என்பதனால், பூவென்பது அடைமொழியின்றித் தாமரைப்பூவையுணர்த்துதல் போல, இலையென்பதும் அடைமொழியின்றியே, இலையென்ற துணையானே வெற்றிலைச்சுருளமுதையுணர்த்த, அவ்வெள்ளிலையைக்கொண்டிருக்கும் பூணையுடையோன் இளங்கோன்: என்பதாம்.

இங்கு, பூண் என்றது, பூணப்படுவது என்னும் ஏதுப்பெயராய், அது பூணூல்போல அகம்படிமைசெய்வாரால் மார்பில் மாறுடிப் பூணப்படும் அடைப்பைக்கோப்பையுணர்த்துமாதலால், இலைகோள்பூண் இளங்கோன் என்பதற்கு அடைப்பைக்கோப்பைப் பூணூல்போல மார்பில் மாறுடிப்பூண்டு அகம்படிமைசெய்பவன் இளங்கோன்: என்னலுமாம்.

இப்பொருளில் 'இலைகொள்கையிளங்கோன்' என்று, இலை கொள்ளுதற்குரிய கையால் விசேடியாது, இலையைக்கொண்டபையால் விசேடித்து இலைகோள்பூணிளங்கோன் என்றது, வெள்ளிலைமடித்துச் சுருளமுது உதவவும், வெள்ளிலைச்சுருள் அமுது செய்த வியர்வுதீரத் திருவாலவட்டம் பரிமாறவும், திருத்தம்பலத்தாழியேந்தவும், மற்றுமுள்ள பணிவிடைகள்செய்யவும் கைகளுக்கு அவகாசமுண்டாயிருக்கும்படி இலைகொள்ளும் பையை (அடைப்பையை)ப் பூணாகப் பூண்டுகொண்டு எல்லாப்பணிவிடையும் செய்யுமவன்: என்பது தோன்றற் கென்க.

இப்பொருளால் அநுக்தத்தொண்டர்செய்தற்குரிய பல வகைப் பணிவிடைகளும் பெறப்படும்.

இக்கருத்துக்கொண்டே,

"அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஃ ஸ்வபதஸ்ச தே"*

என்று இளையபெருமாள்தானும் சொன்னான்.

"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு"†

என்று இளையபெருமாள் தன் ஆதிமூர்த்தியாலும் பெருமாளுக்கு அநவரத கைங்கரியநிரதன் என்று ஆழ்வாரும் பணித்தார்.

இவற்றால், பலவகைப்பட்ட பகவத்கைங்கர்யங்களும் பாகவத சேஷத்வமும் (அடியார்க்கடிமையும்) பரதாழ்வானுக்கு உடன் பாடென்று காட்டியவாறாயிற்று.

இங்ஙனம் இவன் (பரதன்) வினவியதற்கெல்லாம் விடையாகுமாறு எல்லாம் உண்டு என்னும் பொருள்தோன்ற உண்டு என்று தூதுவர் சொல்லவும், உடனே,

'தலையில் ஏந்தினன் தாழ்தடக்கைகளே'

என்றார்.

இதனால், பகவத்பாகவத குசலவிசாரரவசர்ங்களில் அவர்நலந் தெரிந்தவுடன், அது பகவத்க்ருபையென்று, க்ருதஜ்ஞதையோடு அஞ்சலிஹஸ்தராயிருந்து, மங்களாசாசனம்செய்யவேண்டும்: என்பதும் இம்மெய்ந்நெறியொழுக்கமென்பது காட்டியவாறாயிற்று.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---

* ஸ்ரீராமாயணம். பாலகாண்டம் 31-ம் ஸர்க்கம். சுலோகம்-27.

இதன்பொருள்:—நீ துயிலொழிந்தபொழுதும், துயிலும்பொழுதும் உனக்கு நான் எல்லா அடிமையும் செய்துபோருவேன்: என்பதாம்.

† இயற்பா. முதல்திருவந்தாதி. 53.

தா(யா)ரா நகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

# ஸரஸ்வதீகண்டாபரணம்

## (கலைமகள் கழுத்தணி)

[௨௦௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### 4. மாதுரியம்.

माधुर्यमुक्तमावेशे क्रोधादावप्यतीव्रता ।

*சினமுதலியவை நிகழ்வுழியும் கடுமையின்றியிருத்தல் மாதுரியமென்னும் குணமாம்.*

உதாரணம்:—

भ्रूभेदे सहसोद्गतेऽपि वदनं नीतं परां नम्रता-
मीषन्मां प्रति भेदकारि हसितं नोक्तं वचो निष्ठुरम् ।
अन्तर्बाष्पजडीकृतं प्रभुतया चक्षुर्न विस्फारितं
कोपश्च प्रकटीकृतो दयितया मुक्तश्च न प्रश्रयः ॥

*சினத்தால் மிகுவிரைவில் புருவநெரிப்பு உண்டாயிற்று, ஆயினும், முகம் மிகவும் (அவளால்) வணக்கப்பட்டது; என்னைநோக்கி மனவேற்றுமையால் சற்று நகை நிகழ்ந்தது, ஆயினும், கொடிய சொல் ஒன்றேனும் சொல்லப்படவில்லை; பெருகுகிற கண்ணீர் உள்ளேயே அடக்கப்பட்டது, ஆயினும், தனக்குள்ள தலைமையால் கண்கள் மலரவிழிக்கப்படவில்லை,—(ஆகையால்) என்காதலியால் சினக்குறிப்பும் வெளியிடப்பட்டது, மரியாதையும் கைவிடப்படவில்லை.*

*இங்கே, தலைவி (வாஸவதத்தை) தலைவன்மாட்டுப் பெரும் பிழைகண்டு சினங்கொண்டுழியும் அதனை ஒருவாறு அடக்கிக் கொண்டு மரியாதையுடன் ஒழுகினமையின், இது மாதுரியமெனப் பட்டது.*

### 5. ஸௌகுமார்யம்.

अनिष्ठुराक्षरं यत्राहुः सौकुमार्यं तदुच्यते ॥ ௮௦ ॥

கடுமையின்மையே "ஸௌகுமார்யம்" என்பர்.

உதாரணம்:—

सद्यः पुरीपरिसरेऽपि शिरीषमृद्वी
सीता जवात् त्रिचतुराणि पदानि गत्वा ।
गन्तव्यमस्ति कियदित्यसकृद्ब्रुवाणा
रामाश्रुणः कृतवती प्रथमावतारम् ॥

வாகைப்பூப்போலும் மெல்லிய உடல்வாய்ந்த சீதை, (அயோத்தி) நகருக்கருகே மூன்று நான்கு அடிகள் விரைவாக வைத்து நடந்து, உடனே, இன்னும் எவ்வளவுதூரம் செல்ல வேண்டுமென்று கேட்பாளாய், இராமபிரான்கண்ணீருக்கு முதல் வீழ்ச்சியை உண்டாக்கினாள்.

இங்கே, சீதையின் மென்மையை நினைந்தவுடன் இராமனுக்குக் கண்ணீர்வருதல் ஸௌகுமார்யமாம்.

## 6. அர்த்தவியக்தி.

अर्थव्यक्तिः स्फुटवस्तु साक्षात्क्रिय निगद्यते ।

வருணிக்கப்படும்பொருள் படிப்போர்க்கு நேரிற்காணப்படுவதுபோலத் தோன்றுமாறுகூறின் அது அர்த்தவியக்தி எனப்படும்.

உதாரணம்:—

पृष्ठेषु शङ्खशकलच्छविषु च्छदानां
राजीभिरङ्कितमलक्तकलोहिताभिः ।
गोरोचनाहरितबभ्रु बहिःपलाशम्
आमोदते कुमुदमम्भसि पल्वलस्य ॥

சங்குபோல் (வெண்மை) நிறமுள்ள இதழ்களின் பின்புறங்களிற் செம்பஞ்சுபோற் சிவந்தநிறமுள்ள ரேகைகளுடன்கூடியதும், கோரோசனைபோற் பச்சைநிறமும் பொன்னிறமும் உள்ளதுமான ஆம்பல் வாவியிற் கமழ்கின்றது.

இங்கே, படிப்போர்க்கு ஆம்பற்பூவை நேரிற்காண்பதுபோலத் தோன்றுமாறு கூறியிருப்பதால், இது "அர்த்தவியக்தி" என்னும் குணமுடையதாம்.

### 7. காந்தி.

காந்தி꞉–ஔஜ்வல்யம் ஸ்மாக꞉..................

சுவை ஒளிருமாறு கூறின், அங்குக் 'காந்தி' என்னும் குணம் உளதாம்.

உதாரணம்:—

> ஸாமர்—ஸூதுஹா குவோஜவதவெ வகாஷி
> காஞ்ஜல ஹஷ்மிவிதா ஸ ஸஂஜரீதி ।
> கதுாவி கிஂ ந ஸவி ஹாஜ நீலுஸீநாஂ
> வெஷீ நவெஷ்ஷவதி வெவமூராணாய꞉ ॥

தோழி! "தலைவன் கையால் தீட்டப்பெற்ற தொய்யிற் பூங்கொத்து என்கன்னத்தில்விளங்குகின்ற"தென்று தருக்கடையா தொழிவாயாக. (தலைவன் இவ்வித உபசாரங்கள் செய்யும்போது) கூச்சத்தினல் நடுக்கம் உண்டாகாதிருந்தால் நானும் இதுபோன்ற பூங்கொத்துக்களைத் தலைவன்தீட்டுவதற்கு இலக்காயிருப்பேன்.

இங்கே ஒருதலைவனையடைந்த இருதலைவியரில் ஒருத்தி மற்றொருத்தியை ஏசுவதைக் கூறுமாற்றல் தலைவனது காதலொடு பட்ட காமச்சுவை ஒளிருமாறு கூறியிருத்தலால், ஈண்டுக் "காந்தி" என்னும் குணம் தோன்றுவதாயிற்று.

### 8. உதாரதை.

......................ஸமுத்கர்ஷ꞉ உதாரதா ॥ அக ॥

ஐசுவரியத்தின் மேம்பாடு "உதாரதை" எனப்படும்.

உதாரணம்:—

> ஹாணா நாஸநிவெ ந வுத்திராஹிதா ஸத்கவுகெஷவெ ந
> தொயெ காஂவ நவஜ்ரெணகவிஸெ வஞாஹிஷெகக்ரியா ।
> யாநஂ ரத்நஸிஹாஹெஷவிஜயஸ்ரீஸந்நிவெஸஂயஸோ
> யஸாஂஸதி தவொஹிரநூஸநயஸவஷிஂஸவஸுதுஜீ ॥

இது மரீசிமுனிவராசிரமத்தைப்பற்றியது.

நல்ல கற்பகச்சோலையிலிருந்தும் பிராணவாயுவையுட்கொண்டு வாழும் வாழ்க்கையை இவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்; பொற்றாமரைகளின் மகரந்தப்பொடிகளால் பொன்னிறமாயுள்ள நீரையடைந்தும் நியமங்கருதி முழுகுகின்றனர்; இரத்தினத்தாலிழைக்கப்பெற்ற வீடுகளில் இருந்துகொண்டும் கடவுட்டியானத்தைச் செய்கின்றனர்; அரம்பையர்முன்னிலையிலும் மனத்தையடக்கியொழுகுகின்றனர்; (ஆகவே) மற்ற இருடிகள் தவங்கள்செய்து எதை அடையவிரும்புகின்றனரோ அவ்விடத்திலிருந்துகொண்டும் இவர்கள் தவம்புரிகின்றார்களே!

இங்கே, மரீசிமுனிவராசிரமத்தின்புறத்தே கற்பகம் முதலியவை உள்ளனவென்று அதன் மேம்பாட்டைக் கூறியிருத்தலால், இது "உதாரதை" ஆயிற்று.

## 9. உதாத்ததை.

आशयस्य यदुत्कर्षस्तदुदात्तमिष्यते ।

கருத்தின்மேன்மையை உதாத்ததை என்பர்.

**உதாரணம்:—**

पात्रे बाणावतिर्निखिलनाथे
क्षोणीयसि क्ष्मामुपेयुषि देये ।
व्रीडावनतं तस्य तदा तदानीं
वैलक्ष्यतां येन स जयतु देवः ॥

மூவுலகிற்கும் நாதனாகிய திருமால் தானம்வாங்குபவனாக முன்னிற்கும்பொழுது, கொடுக்கவேண்டியபொருளான பூமிமுழுவதுமே மிக அற்பமானதென்றுதோன்றுதலால் மஹாபலிக்கு அடிக்கடி வெட்கத்துடன்கூடிய நகையரும்பிற்று. அதைப்பார்த்து அந்த வாமனமூர்த்தியும் வியப்படைந்தார்.

பூமிமுழுவதையும் கொடுக்கும் கருத்துடைய மாவலி, கொடுப்பதற்கு அது போதாதென்றுகருதி வெட்கமடைந்தா

னென்று கூறியிருத்தலால், மாவலியின் உயர்ந்த மனக்கருத்துத் தோன்றுதலின், இது "உதாத்ததை" எனப்படும்.

## 10. ஓஜஸ்.

ஓஜஃ ஸ்வாயுவஸாயஸ்ய விஶெஷொத்யெஷ்டு யொ ஹவெக ॥

கூறும்பொருளில் தான் சிறந்த நம்பிக்கைகொண்டிருப்பதாகக் கூறுதல் "ஓஜஸ்" என்னுங் குணமாம்.

உதாரணம்:—

தாநெந்யவ யதி ஊத்தாநி தா வாவ யதி ஶக்தயஃ ।
த தஃ வாஶாராஸ்ய ந ஞீஃ வாராஹவு ॥

உலகிலுள்ள பூதப்பொருள்கள் முன்புள்ளனவேயாகவும், அவற்றின் ஆற்றல்களும் முன்பிருந்துவந்தனவேயாகவும் இருக்குமாஞல், அவற்றிலிருந்து பரசுராமனுக்குத் தோல்விவருமென்று நாம் நினைக்கவும்மாட்டோம்.

இங்கே, பரசுராமன் வெற்றிபெறுவதில் உறுதியானநம்பிக்கையிருப்பதாகக்கூறப்பட்டிருத்தலால், இது "ஓஜஸ்" என்னும் குணமாம்.

## 11. ஔர்ஜித்தியம்.

ரூஷாஹங்காரொதௌர்ஜித்யு..............

அஹங்காரம் மேலிடுதலை "ஔர்ஜித்தியம்" என்பர்.

உதாரணம்:—

உமா வயூஹஸ்வாநு ஜாதா யாஜிதார ஐஶ வயு ।
வரஃ ஶம்ஹாரயம்ஹெயஷ்த்வ தக்ஷொஹ்ஷ தயெ வியிஃ ॥

(இமவானிடத்துச் சிவபிரானுக்கு மகட்பேசச்சென்ற ஸத்த விருடிகள்கூற்முக இச்சுலோகம் அமைந்துள்ளது.)

மணமகளோ பார்வதி; பெண்கொடுப்பவரோ நீர்; மகட்பேச வந்தவர்களோ இப்படிப்பட்ட (விரதவொழுக்கமுதலியவற்றால் மிக

மேம்பட்ட) நாங்களாயுள்ளோம்; மணமகனே! சிவபிரானுவார்: உங்கள்குலம் மேம்படுவதற்கு இந்த நிகழ்ச்சியே சாலும்.

இங்கே, ஸத்தவிருடிகள் தங்களைத் தவமுதலியவற்றால் மேம்பட்டவர்களாகக் கூறிக்கொள்ளுதலால் அவர்களது அகங்காரம் புலப்படுதலின், இது "ஔர்ஜித்தியம்" எனப்படும்.

## 12. பிரேயஸ்.

..............ப்ரேயோ வஸ்துஷ்வபீஷ்டதா ।

பொருள்களில் விருப்பத்தைத் வெளியிடுதல் "பிரேயஸ்" எனப்படும்.

**உதாரணம்:—**

ரஸவதம்ருதம் க: ஸந்தேஹோ மதுந்யபி நாந்யதா
மதுரமதிகம் சூதஸ்யாபி ப்ரஸந்நரஸம் பலம் ।
ஸக்ருதபி புநர்மத்யஸ்த: ஸந் ரஸாந்தரவிஜ்ஜநோ
வததுயதிஹாந்யத்ஸ்வாது ஸ்யாத் ப்ரியாதஶநச்சதாத் ॥

அமுதம் மிக்கசுவையுள்ளதென்பதில் ஐயமில்லை; தேன் சுவையுள்ளதென்பதிலும் அங்ஙனமே (ஐயமில்லை); சிறந்த மாம்பழமும் அதிகச்சுவையுள்ளதுதான்;—மற்றைச்சுவைகளையறிந்த மனிதன் நடுநிலையில்நின்று கூறுவானாக: காதலியின் அதரத்தைக்காட்டிலும் சுவையுள்ளது வேறு யாது?

இங்கே, ஒருதலைவன் அமுதம் முதலியவற்றைக்காட்டிலும் தன் காதலியின் அதரமே சுவையுள்ளதென்று தன்விருப்பந் தோன்றக் கூறியிருத்தலால், இது "பிரேயஸ்" எனப்படும்.

## 13. சுசத்தை.

க்ஷுத்ரார்தாநாமந்யைரபிதாநேஷு ஸுஶப்ததா ॥௮௩॥

கொடியபொருள்களை அவற்றைக்குறிக்கும் சொல்லாற் கூறாது அவற்றிற்குப் பரியாயமான பிறசொற்களாற் கொடுமைதோன்றாதவாறு கூறுதல் "சுசத்தை" ஆகும்.

உதாரணம்:—

தெவவ்ரதெ வாஂஹதி தீவநித்ராம்
த்ராணெ ச கணெ ச யஶோவஶெஷெ ।
ஶக்ஷ்மீஸஹாயஸ்ய தவாத்ய வத்ஸ
வாத்ஸல்யவாந் த்ரௌணிரயம் ஸஹாயஃ ॥

குழந்தாய்! பீஷ்மன் நெடுந்துயிலை விரும்புமவனாகவும், துரோணனும் கருணனும் புகழ்மட்டும் எஞ்சியவர்களாகவும் உள்ள இப்பொழுது, ராஜ்யலக்ஷுமியுடன்கூடிய உனக்குத் துரோணன் புதல்வனாகிய அசுவத்தாமன் உதவிசெய்வான்.

இங்கே, 'இறத்தல்' என்னும் கொடுமையானபொருளை அச்சொல்லாற்கூறாது அதற்குப் பரியாயமான "நெடுந்துயில்" "புகழ்மட்டும் எஞ்ச நிற்றல்" என்ற கொடுமைதோன்றாத சொற்களாற் கூறியிருத்தலின், இது "சுசத்ததை" எனப்படும்.

## 14. ஸமாதி.

வ்யாஜாவஷ்டம்பநம் யத்ர ஸமாதிரிதி ஸ்ம்ருதஃ ।

கருதியதொன்றைச் செய்யவேண்டுழி அதற்கு மற்றொரு காரணத்தை வியாஜமாகப்பற்றிக்கொள்ளுதல் "ஸமாதி" எனப்படும்.

உதாரணம்:—

தர்பாங்குரேண சரணஃ க்ஷத இத்யகாண்டெ
தந்வீ ஸ்திதா கதிசிதெவ பதாநி கத்வா ।
ஆஸீத்விவ்ருத்தவதநா ச விமோசயந்தீ
ஶாகாஸு வல்கலமஸக்தமபி த்ருமாணாம் ॥

தருப்பையின்முளையால் கால் ஊறுண்டதென்று காரணமில்லாதிருப்பவும் சில அடிகள் சென்றவுடன் சகுந்தலை நின்றுவிட்டாள்; மேலும் மரக்கிளைகளில் அவளாடை பற்றாதிருந்தபோதும் பற்றியதாகக்கொண்டு அவ்வாடையை விடுவிப்பவள்போலவிருந்து என்னைத் திரும்பிப்பார்ப்பவளாயிருந்தாள்.

இங்கே, துஷ்யந்தனைக் காணவிரும்பிய சகுந்தலை தோழியர் அண்மையிலிருத்தலால் நாணங்கொண்டவளாய்க் காலில் நாணல் முனை ஊறுசெய்ததென்று ஒருகாரணத்தையேறிட்டுக்கொண்டு தோழியரைப்பிரிந்து தனியளானாள்; தன் ஆடை மரக்கிளைகளில் மாட்டிக்கொண்டதென்றதொரு காரணத்தை ஏறிட்டுக்கொண்டு, அவ்வாடையை எடுப்பவள்போல நின்று அவனைப் பார்த்தாள்: என்றலின், இது "ஸமாதி" எனப்படும்.

## 15. ஸௌக்ஷ்மியம்.

𑌸𑍌𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑌮𑍍 ॥

மிகநுண்ணியபொருளைத் தெரிவித்தல் "ஸௌக்ஷ்மியம்" எனப்படும்.

உதாரணம்:—

𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌸𑌂𑌵𑌲𑌿𑌤𑌮𑌾𑌂𑌸𑌲𑌦𑍋𑌰𑍍𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤𑌂
𑌸𑍋𑌲𑍍𑌲𑌾𑌸𑌹𑌾𑌸𑌰𑌸𑌸𑌂𑌵𑌲𑌿𑌤𑌾𑌨𑌨𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 ।
𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌹𑍇𑌲𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌚𑍇𑌷𑍍𑌟𑌮𑌾𑌨𑌂
𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌨𑌯𑌨𑌂 𑌮𑌿𑌥𑍁𑌨𑌂 𑌚𑌕𑌾𑌸𑍍𑌤𑌿 ॥

காதலனும் காதலியும், தம்மில் ஒருவர்முகத்துடன் மற்றொருவர்முகத்தையிணைத்துக்கொண்டும், புன்சிரிப்புடன் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டும், களிப்புடன் அரைப்பார்வையால் நோக்கிக்கொண்டும், ஒவ்வொரு க்ஷணத்திலும் காதலுடன்கூடிய தொழில்களைச்செய்துகொண்டும், அடக்கத்தை விட்டொழித்தும் விளங்குகின்றனர்.

இங்கே, இங்ஙனங் கூறியவாற்றால் காதலாது காதலாகிய சூக்குமப்பொருள் நன்கு தெரிவிக்கப்பட்டிருத்தலால், இது "ஸௌக்ஷ்மியம்" எனப்படும்.

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,

மதுரை.

# கம்பராமாயணசாரம்.

[௧௯௪-ஆம் பக்கத் தொடர்ச்சி]

## மாயாசனகப்படலம்.

*மகோதரன் மாயையினால் உண்டாக்கிய சனகனைச் சீதைக்குக் காட்டியதைக் கூறுவது.*

### இராவணன் சீதையின் இசைவுபெறுதற்கு மகோதரன் உபாயங்கூறல்.

[ கும்பகருணன் போர்க்களத்துக்குப் போனபின், இராவணன் தன்னிடம் வந்த மகோதரனை நோக்கி, 'நான் சீதையை அடைந்து துன்பந்தீரும் உபாயம் சொல்லுக' என, அவன், 'சீதை தானே உன்னைச் சேரும்படியான மாயையைச் செய்வேன். மருத்தன் என்பவனை அரக்கவடிவம் நீங்கிச் சனகனுருவமாக மாறச்செய்து சீதையிடங் கொண்டுவந்து காட்ட, அவள் இசைவாள்' என்றான். இராவணன், மகிழ்ந்து நன்றிதெரிவிப்பானாய், எழுந்து மகோதரனை மார்போடிறுகத்தழுவி, 'மாயாசனகனை அசோகவனத்துக்குக் கொண்டுவா' என்று கூறித் தன் கிரீடவரிசை இளவெயில்போன்ற ஒளியைப் பரப்ப, அதனால் இருள்தோற்றோடக் கரிய மார்பில் அணிந்திருந்த மாலை, நீலமலைபருவிபோல விளங்க, (மகோதரனுபாயத்தால் தன் காமக்கருத்து நிறைவேறிவிடுமென்ற மகிழ்ச்சியால் இறுமாப்புக்கொண்டு) மதயானைபோல நடந்துபோனான்; தீபங்கள் தீபங்களை ஏந்தினாற்போலத் தேவமாதர்கள் தீபங்கள் தாங்கிச் சூழ்ந்துவர, கட்டியக்காரர் கட்டியங்கூறிச் செல்லச் சீதையிருந்த இடத்துக்கு வந்துசேர்ந்தான். ]

### இராவணன் சீதையைக் காணுதல்.

98 பண்களாற் கிளவி செய்து பவளத்தா லதரமாக்கிப்[1]
பெண்களா ரீர்ந்தன்[2] நல்ல வுறுப்பெலாம் பிறங்கி யீட்டி[3]
எண்களா லளவா[4] மானத் துணைந்தோதத் தியற்றி ஞானக்
கண்களா லாரக் கண்டா னவனையோர் கலக்கங் காண்பான்.

கொண்டுகூட்டு: பண்களால் கிளவிசெய்து, பவளத்தால் அதரம் ஆக்கி, பெண்கள் ஆனார்க்குள் நல்ல உறுப்பு எ(ல்)லாம் பிறக்கி ஈட்டி, எண்களால் அளவா(த) மானக்குணம் தொகுத்து இயற்றினாளைக் கண்களால் ஆரக் கண்டான். அவனோ ஓர் கலக்கம் காண்பான்.

பொருள்: (பிரமதேவன், இனி) இசைகளைக்கொண்டு பேச்சைப்படைத்து, (சிவந்த) பவளத்தினால் இதழை உண்டாக்கி, (உலகந்தோன்றிய நாள்தொட்டுத் தான் படைத்த) பெண்களின் (உறுப்புக்களுள்) சிறந்த அழகுடைய உறுப்புக்களெல்லாவற்றையும் அடுக்கிக் கூட்டியும் கணக்கிலடங்காத பெருந்தன்மையான குணங்களனைத்தையும் ஒன்றுசேர்த்தும் படைக்கப்பெற்றவளான சீதையை இராவணன் கண்டான்.

பண் - இசை. கிளவி - பேச்சு. அதரம் - உதடு. நல்ல - அழகிய. 'நலம்' அழகு என்ற பொருள்பட வருதல் காண்க. பிறக்கி - அடுக்கி. ஈட்டுதல் - கூட்டுதல். எண் - இலக்கம். மானம் - பெருமை. தொகுத்தல் - திரட்டிக்கூட்டுதல். ஆர - திருத்தியாக. 'காண்பான்' என்பதில் 'காணுதல்' 'செய்த'லென்னும் பொருளுடையது. இப்படலம் 4-ஆம் பாட்டில், சீதையை 'வெருவல் காண்பான்' (- அஞ்சுதலைச்செய்வான்) என வருதல் காண்க. 'முனைவன்கண்டது முதல் நூ லாகும்' என்பதில் 'கண்டது' செய்தது என்று பொருள்படலும் காண்க.

'கண்டான்' என்றுமட்டும் கூறாது 'கண்களாற் கண்டான்' என்றது, நன்றாக, தெளிவாக, இருபதுகண்களையும் அலாவிழித்துக்கொண்டு கூர்ந்து பார்த்தானென்பது குறிக்க.

'அவனோ ஓர் கலக்கம் காண்பான்' (ஆக வந்த அந்த இராவணன்), அடுத்த பாட்டில் 'இரணபீடத்து (- பொன் ஆசனத்தில்) இருந்தனன்' என்பதனோடு முடிகின்றது.

சீதை சிறந்த அழகுகளும் சிறந்த குணங்களும் நிறைந்தவளென்பது முதல் மூன்றடிகளில் மிக இனிமையாக வருணிக்கப் பெற்றிருக்கின்றது.

பாடபேதம்: [1] தாமமாக்கி. [2] ஆனோர்க்கு. [3] பெருகவீட்டி, பெருக்கி யீட்டி. [4] அளவில்.

[ அவன், சீதையெதிரே, ஒருபொன்னாசனத்திலே, தலைக்கு மேலே வெண்கொற்றக்குடை விளங்க, இருபக்கத்தும் சாமரை இரட்ட, ஒருகால் மற்றொருகாலின் தொடைமீதுதோன்ற(அட்டணைக் கால்போட்டு), அரையிற்கட்டிய உடைவாள் (அவன் ஆணையை மீறுவார் வெட்டப்படுவரென்பதைக் குறிப்பித்து) விளங்க வீற்றிருந்து பின்வருமாறு பேசுவானானான். ]

## இராவணன் காமத்தால் வருந்திக்கூறுதல்.

99 என்றுதா னடிய னேனுக் கிரங்குவ திந்து வென்பான்
என்றுதா னிரவி யோடும் வேற்றுமை தெரிவ[1] தென்பால்
என்றுதா னனங்க[2] வாளிக் கிலக்கிலா திருப்ப தாவ(து)
என்றுதா னுற்ற[3] தெல்லா மியம்புவா னெடுத்துக்[4]கொண்டான்.

கொண்டுகூட்டு: 'என்றுதான் அடியனேனுக்கு இரங்குவது? இந்து என்பான் இரவியோடும் வேற்றுமை தெரிவது என்பால் என்றுதான்? அனங்கவாளிக்கு இலக்கு இ(ல்)லாதிருத்தல் ஆவது என்றுதான்?' என்று (இராவணன்) தான் உற்றதெல்லாம் இயம்புவான் எடுத்துக்கொண்டான்.

பொருள்: '("உம்முடையமனம், இன்றைக்கு இரங்கும், நாளைக்கு இரங்கும்", என்று எண்ணியெண்ணி, எண்ணிறந்த நாள்கள் கழிந்தன.) எந்நாள்தான் நீர் அடியேன்திறத்தில் இரங்குநாளோ (என்பதறியேன்.) (நான் உம்மைக் காதலித்தல்காரணமாக, என்னைக் காய்தலால் சூரியனென்று நான் மயங்குகின்ற, பிறரால்) சந்திரனென்று சொல்லப்படுகிறவனுக்கும் (உண்மையான) சூரியனுக்கும் உள்ள வேற்றுமை எனக்குத் தெரியும்நாள்தான் எந்நாளோ (என்பதும் அறியேன்). (இதுவரையும், நீர் அருள்செய்யாமையால், என்னைத் தாக்கும்) காமபாணத்துக்கு (உமது அருள் பெற்று, அந்த அருட்பேற்றின் பலனாக, அடியேன்) இலக்காகாதிருக்கும் நாள்தான் எந்நாளோ (என்பதும் அறியேன்), என்று (முன்னுரைகூறி) இராவணன் தான்பட்டபாடெல்லாவற்றையும் (விவரமாகக்) கூறுவானானான்.

இரங்குவது, இரங்கும் நாளையும், தெரிவதும் ஆவதும், தெரியும் நாள் ஆகும் நாளையும் குறித்தன. இந்து-சந்திரன். 'என்பால்' என்பது ஏழாம் வேற்றுமையாயினும் பொருட்பொருத்தம்பற்றி, முதலடியில் 'அடியனேனுக்கு' என்பதனோடு இயைய, நான்காம்வேற்றுமையாகக் கொள்ளப் பட்டது. 'யாதன் உருபிற் கூறிற்றாயினும், பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்'. 'என்பால்' என்பதற்கு 'என்திறத்தில்' 'என்மட்டில்' என்ற பொருள்களும் பொருந்தும். அனங்கன்-மன்மதன். வாளி-அம்பு. இயம்புவான் எடுத்துக்கொண்டான் - கூறுவதை மேற்கொண்டான்.

இந்தப்பாட்டு, இளகிய தாழ்ம்பட்ட ஓசையுடையதாயிருப்பதும், 'எந்நாள்' என்ற பொருளுடைய மூன்று 'என்று'களுக்கும் பின் 'தான்' 'தான்' 'தான்' என அசைநிறைத்திருப்பதும், 'இந்து' என அமையாது 'இந்து என்பான்' என்றும், 'இலக்கிலா திருத்தல்' என்பதே போதியதாயிருக்க, 'இலக்கிலா திருத்தலாவது' என்றும் நீட்டிக்கூறியிருப்பதும் இராவணன் ஊக்கம் இழந்தவனாய், எப்போதும்போலப் பேசாமல், ஈனசுரத்தில்—தாழ்ந்த குரலில்—பேசுகிறானென்பதை உணர்த்துகின்றன. ஊக்கம் குன்றியதன்காரணம், முதனாட்போரில் அடைந்த முழுத்தோல்வியென்பது கூறாமலே விளங்கும்.

நிந்தனைப்படலத்தில், சீதை இணங்கும்படி இராவணன் இரந்துவேண்டுமிடத்தில், அவன் அவளை ஏகவசனமாக (-மரியாதைகுறியாத ஒருமையாக)க் கூறுவதும், இங்கே பகுவசனமாக (-உயர்வுப்பன்மையாக)க் கூறுவதும், முறையே, அவனுடைய அப்போதையசெருக்கான நிலையையும் இப்போதைய கருவபங்க நிலையையும் குறிப்பிக்கின்றன.

'எழுந்துகொண்டான்' என்ற பாடமும் காணப்படுகிறது. இதற்கு முந்திய பாட்டில், 'இட்டதோர் இரணபீடத்து (-பொன் ஆசனத்தில்) இருந்தனன்' (இராவணன்) என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தவன், சீதை இரங்கி இணங்கவேண்டுமென்று இரந்து மன்றாடும் வேண்டுகோளை அவள் நிறைவேற்றுதற்குத் தூண்டு

கோலாக, அடக்கமும் பணிவும் காட்ட, எழுந்துநிற்றல் பொருத்த மென்றெண்ணினோரால் 'எடுத்துக்கொண்டான்' என்பது 'எழுந்து கொண்டான்' எனத் திருத்தப்பட்டதுபோலும். பின்வரும் 'என் றுரைத் தெழுந்து சென்று' என்ற பாட்டினால், இராவணன் தன் வேண்டுகோளைக் கூறிமுடித்தபின் எழுந்து சீதையைநோக்கிச் சென்று அவள் பாதங்களில் வீழ்ந்தான் என்பது கூறப்படுதலால், இப்போது எழவில்லையென்பது போதரும். போதரவே, 'எழுந்து கொண்டான்' என்ற பாடம் பொருந்துவதன்றென்பது புலப்படும்.

இராவணன் கூற்றாகிய இந்தப்பாட்டிலும் அடுத்த பாட்டுக் களிலும் கம்பர் கவிசாதுரியம் விசேடமாக விளங்குவது கண்டு களிக்கத்தக்கது.

பாடபேதம்: [1] தெரிப்பது. [2] அனங்கன். [3] பட்ட. [4] எழுந்து.

100 வஞ்சனே னெனக்கு நானே மாதரார் வடிவு[1] கொண்ட
நஞ்சுதோ யமுத முண்பா னச்சினே னாளுந் தேய்ந்து[2]
நெஞ்சு[3]நே ரான தும்மை[4] நினைப்புவிட் டாவி நீக்க
அஞ்சினே னடிய னே[5]னும் மடைக்கல மமுதின் வந்தீர்.

கொண்டுகூட்டு 'எனக்கு நானே வஞ்சனேன்; மாதரார் வடிவு கொண்ட நஞ்சுதோய் அமுதம் உண்பான் நச்சினேன்; நெஞ்சு நாளும் தேய்ந்து நேரானது; உம்மை நினைப்புவிட்டு ஆவி நீக்க அஞ்சினேன்; அமுதின் வந்தீர்! அடியனேன் உம் அடைக்கலம்.

பொருள்: '(என்னை வஞ்சிக்கவல்லவரெவருமில்லை.) எனக்கு நானே வஞ்சகனானேன்; (எவ்வாறென்றால்,) பெண்வடிவுகொண்ட நஞ்சுகலந்த அமுதத்தை உண்ணவிரும்பினேன்; (- இணங்கி இன்பந்தருதலும் பிணங்கித் துன்பந்தருதலும் ஆகிய எதிரெதி ரான இரண்டுதன்மைகளும் உள்ள உம்மைக் காதலித்தேன்; உம்மைக் காதலித்த நாள்முதலாக, உமது காதலைப் பெருமையால்), என் மனம் தினந்தோறும் இளைத்து நொய்யதாகிவிட்டது; (அந்த நொய்ம்மை தீரவேண்டுமானால், உம்மை நினைப்பதை விட்டுவிட வேண்டும்; உம்மை நினைப்பதே எனக்கு உயிராயிருப்பதனால்,

உம்மை நினைப்பதை விடுதல் உயிரை விடுதலேயாகும்; அவ்வா றாக) உம்மை நினைப்பதை விட்டு உயிரை விட அஞ்சினேன்; அடியேன் (உயிர்) உமக்கு அடைக்கலம்.

'மாது' என்பதுபோல, 'மாதர்' என்பதும், ஒருமையாய்ப் பெண்ணைக் குறிக்கும். அப்படிக் குறிக்கும்போது 'மாதர்' என்பதில் உள்ள 'அர்' பகுதிப் பொருள்விகுதியாம். 'மாதர்' என்பது விகுதிமேல் விகுதியாக 'ஆர்' விகுதி பெற்று 'மாதரார்' ஆயிற்று. அந்த 'மாதரார்' என்பது, இங்கே உயர்வுப் பன்மையாகக் கொள்ளற்குரியதாயுள்ளது. உண்பான் - உண்பதற்கு. நச்சினேன் - விரும்பினேன். நாளும் - தினமும் - தினந்தோறும். நேரானது - நேர்மையானது. 'கூர்மையானது','கூரானது' என வருதல்போல, 'நேர்மையானது', 'நேரானது' என வந்தது. நேர்மை - நுண்மை - நொய்மை - மெலிவு. (ஐங்குறுநூறு. அரும்பத அகராதி). நேர்புணை - நொய்யதெப்பம் (சிந்தா. அரும்பத). அமுதின் வந்தீர் - அமிழ்தத்தோடு (திருப்பாற்கடலில்) பிறந்தீர் - இலக்குமிபோல்வீர்.

ஆடவர், தம்மாற் காதலிக்கப்பட்ட மாதர், நஞ்சுபிறத்தற்கும் அமுதுபிறத்தற்கும் இடமான பாற்கடல்போன்று, தம்மைக் காதலிக்கவில்லையானால் துன்பத்துக்குக் காரணமாகவும் காதலித்தால் இன்பத்துக்குக் காரணமாகவுமிருத்தல்பற்றி, அம்மாதரை அவ்வவ்வமயத்துக்கேற்றவாறு (சந்தர்ப்பானுசாரமாக) நஞ்சென்றும் நமனென்றுமோ, அமுதென்றும் ஆவி (- உயிர்) என்றுமோ கூறுவர்.* இதனை உட்கொண்டு, இராவணன், சீதை தன்னைக்

---

* இங்கே பின்வரும் அகலிகைவெண்பாக்கவிகள், கருதத்தக்கவை:—

துன்புதரும் இன்பென்று சொல்லுகோ? அன்றென்னில்,
இன்புதரு துன்பென் றியம்புகோ?—என்புகல்கேன்?
இன்பம்போல் இன்னலாய் இன்னல்போல் இன்பாதல்
தன்பண்பாம் காதல் தனை.

சொல்லுகோ - இயம்புகோ - சொல்வேனோ. இன்னல் - துன்பம்.

காதல் இயல்பிதாங் காரணத்தா லன்றேதாம்
காதல் கொளலுற்ற கன்னியரைக்—காதலர்கள்
ஆவியுண்டு வாழும் அருளறுவெங் கூற்றென்றும்
ஆவியென்றுஞ் சொற்றார் அறிந்து.

ஆவி - உயிர். கூற்று - எமன். சொற்றார் - சொன்னார்.

காதலிக்காவிட்டால் நஞ்சாவாள், காதலித்தால் அமுதமாவாள் என்பது தெரிந்துவைத்தே, அவளைத் தான் காதலித்ததைக் கூறு முகத்தால் 'மாதரார் வடிவுகொண்ட நஞ்சுநேதாய் அமுதம் உண்பான் நச்சினேன்' என்றான். பாற்கடலில் நஞ்சும் பிறந்தது, அமுதமும் பிறந்தது, இலக்குமியும் பிறந்தாளென்பதை மனத்துட் கொண்டு, 'இலக்குமிபோல்வீர்' என்பான் 'அமுதொடு பிறந்தீர்' என்ற பொருளுடைய 'அமுதின்வந்தீர்' என்றான்.

அவளை 'நஞ்சுநேதாய் அமுதம்' என்று கூறியவன், அதற் கியைய 'நஞ்சின்வந்தீர், அமுதின்வந்தீர்' என விளியாது, (நஞ்சொடு பிறந்தகுணத்தைக்கொண்டு என்னைக்கொன்று அழித்திடாமல்,) அமுதொடுபிறந்த குணத்தைக்கொண்டு சாவாமற் காத்தல்வேண்டு மென்பான் 'அமுதின்வந்தீர்' என விளித்தானெனலாம்.

பாடபேதம்: [1] வடிவம். [2] தேய்ந்தநாளும். [3] நெஞ்சில். [4] நேரான நும்மை, நேரானவும்மை, நேர்நும்மை நாயேன், நொந்தும்மை நாயேன், ஓர்நும்மை நாயேன், நேர்நுண்மையாக. [5] அஞ்சினேன்.

101 தோற்பித்தீர் மதிக்கு மேனி சுடுவித்தீர் தென்றல் தூற்ற[1]
வேர்ப்பித்தீர் வயிரத் தோளை மெலிவித்தீர் வேனில் வேளை
ஆர்ப்பித்தீ ரென்னை யின்ன லறிவித்தீ ரமர ரச்சம்
தீர்ப்பித்தீ ரின்ன மென்னென்[2] செய்வித்துத் தீர்தி[3] ரம்மா.

கொண்டுகூட்டு: 'தோற்பித்தீர்! மதிக்கு மேனி சுடுவித்தீர்! தென்றல் தூற்ற (அந்த மேனியை) வேர்ப்பித்தீர்! வயிரத்தோளை மெலிவித்தீர்! வேனில் வேளை ஆர்ப்பித்தீர்! என்னை இன்னலறிவித்தீர்! அமரர் அச்சம் தீர்ப்பித்தீர்! இன்னம் என் என் செய்வித்துத் தீர்திர்! அம்மா!!

பொருள்: '(எடுத்தகாரியங்களெல்லாவற்றிலும் செயமடைந்து வந்த என்னை, உம்மை அடையக்குறித்த காரியத்தில்) தோல்வி யுறும்படிசெய்திட்டீர்! (முன்குளிர்ச்சிசெய்துவந்தவனான) சந்திரனால் என் உடம்பைச் சுடும்படிசெய்திட்டீர்! (முன்வெப்பைநீக்கி வேர்வையை ஆற்றிய, அதே) தென்றலால் (அந்த என்) உடம்பை

(வெதும்பி) வேர்வையுறச்செய்திட்டீர்! (முன்) வயிரம்போல வலியுடையவைகளாயிருந்த என்தோள்களை மெலிவுறச்செய்திட்டீர்! (உம்மைக் காதலிக்குமுன் யான் காதலித்த மாதரெல்லாம் எனக்கு இணங்கினதால் அடங்கியிருந்த) மன்மதனை ஆரவாரஞ்செய்யுமாறுசெய்திட்டீர்! (முன் துன்பமென்பது இன்னதென்றறியாதிருந்த) என்னைத் துன்பம் (இப்படிப்பட்டதென) அறியச்செய்திட்டீர்! (முன் எனக்குப்பயப்பட்டிருந்த) தேவர்கள் (இப்போது உம் காதலால் நான் மெலிவுற்றிருப்பதுகண்டு) பயம்நீங்கச்செய்திட்டீர்! (இவ்வாறு பலவற்றை அவற்றின் இயற்கைக்கு எதிரிடையானதன்மையடையும்படி விபரீதம்விளைத்த நீர்) இன்னும் என்ன என்ன (விபரீதங்கள்) நிகழச்செய்துவிடுவீரோ?

தூற்றல் - குறுந்திவலைசிந்துதல். வேனில், வசந்தகாலமென்னும் இளவேனிற்பருவத்தைக் குறித்தது. வேள் - (வசந்தகாலத்தைக் காமத்தை எழுப்பும் தன் முயற்சிக்குத் துணையாகவுடைய) மன்மதன். ஆர்ப்பித்து - ஆரவாரம்செய்யும்படி செய்து. இன்னல் - துன்பம். என் என் - என்னை என்னை - என்ன என்ன - யாது யாது. தீர்திர் - விடுவீர் - ஓய்வீர். 'தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டாகும்' (தொல் - சொல். 318) தமிழகராதி.

'அம்மா - வியப்பிடைச்சொல்: ஒரு மகாவீரனைத் தனிமையுடனுள்ள ஒரு பெண் படுத்துவிக்கும் பாட்டைக்குறித்து வியந்தவாறு'. வை. மு. கோ.

இராவணன் இதன்முன், 'அடியனேன் (உமக்குத் தோல்வியுற்றேன்) உம் அடைக்கலம்' என்று கூறியதன் அனுவாதமாகத் 'தோற்பித்தீர்' என்றான். அதிபலவான்களாயுள்ளார் ஆருக்கும் தோற்காத தான் அபலை*யான ஒரு பெண்ணுக்குத் தோற்றிடுதல், இயல்பாக, குளிர்ச்சிசெய்யும் சந்திரனும் தென்றலும் சூடுசெய்தல், வன்மையாயிருந்த தன் தோள்கள் மென்மையாதல், அடங்கியிருந்த மன்மதன் ஆரவாரித்தல், துன்பமறியாத தான் துன்பமறிதல், பயமுடையராயிருந்த தேவர் தைரியமுடையராதல் ஆக

* அபலை - பலமில்லாதவள்; பெண்.

எல்லாம் இயற்கைக்குணங்கள் மாறி எதிரிடைக்குணங்களெய்தும் படி செய்துவிட்டீர்! இன்னும் இவைபோன்ற என்ன என்ன விபரீதச்செயல்களைச் செய்துமுடிப்பீரோ என்றவாறு.

பாடபேதம்: [1] ஆர்த்த. [2] இன்னு மென்ன. [3] தீர்த்திர்.

102 பெண்ணெலா நீரே யாக்கிப் பேரெலா முமதே யாக்கிக்
கண்ணெலா நுங்கண் ணாக்கிக் காமவே ளென்னு நாமத்
தண்ணலையெய் வானு[1] மாக்கி யைங்கணை[2] யரியத்தக்க
புண்ணெலா மெனக்கே[3] யாக்கி விபரீதம் புணர்த்தி[4] விட்டீர்.

கொண்டுகூட்டு: 'பெண்(கள்) எல்லா(ரு)ம் நீரே ஆக்கி, பேரெ(ல்)லாம் உ(ம்)மதே ஆக்கி, கண்ணெலாம் நுங்கண்ணே ஆக்கி, காமவேள் என்னும் நாமத்து அண்ணல் (என்னையே) எய்வானும் ஆக்கி, ஐங்கணை அரியத்தக்க புண் எ(ல்)லாம் எனக்கே ஆக்கி விபரிதம் புணர்த்திவிட்டீர்.

பொருள்: '(நான் வேறெந்தப் பெண்ணையும் விரும்பாமல் உம்மையே விரும்பச் செய்திருக்கின்றீராதலால்,) பெண்களெல்லாம் நீர் ஒருவரேயாகச் செய்தும், (நான் யாரைக் கூப்பிடக் கருதினும் என் வாயில் வரும்) பெயர்களெல்லாம் உம்முடைய பெயரே யாகச் செய்தும், என் பார்வை யெல்லாம் (வேறெவ்விடமும் செல்லாமல்) உம்மொருவரிடமேயாகச் செய்தும், (என்னை எய்ய அஞ்சியிருந்தவனும் பலரை எய்துகொண்டிருந்தவனுமான) மன்மதன் (அச்சந்தீர்ந்து என் ஒருவனையே) எய்வானாகச் செய்தும் (பலருக்குப் புண்செய்த) பஞ்சபாணங்கள் உண்டாக்கக்கூடிய புண்களெல்லாம் என்னொருவனுக்கே உண்டாக்கச் செய்தும் (என் இயற்கைநிலைமை நீங்கி) மாறுபாடான நிலைமையை யான் பொருந்தும்படி செய்துவிட்டீர்!

'கண்', ஆகுபெயராய்ப்'பார்வை'யை உணர்த்தியது. நும்கண் - உம்மிடம். காமன், வேள், காமவேள் என்பவை மன்மதன் பெயர்கள். அண்ணல் - பெருமையிற் சிறந்தோன். ஐங்கணை - அஞ்சு அம்பு: அவை தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, குவளைப்பூ என்பவை.

விபரீதம் என்பது செய்யுளாதலால், 'விபரிதம்' என நின்றது. விபரீதம் - மாறுபாடு. புணர்த்தல் - சேர்த்தல்; நிகழ்த்துதல் (தமிழகராதி).

இராவணன் சீதையைக் கண்டதுமுதலாக (என்பானேன், சீதையைப் பற்றிச் சூர்ப்பனகை சொல்லக் கேட்டதுமுதலாக) வேறெந்தப்பெண்ணை யும் விரும்பாமையால் 'பெண்ணெலாம் நீரே ஆக்கி' என்முன்; சீதையையே இடைவிடாது சிந்தித்துக்கொண்டிருந்ததனுல், யாரைக் கூப்பிடக்கருதினு லும் ("யாரே யெனு மொன்று சொல்லத் தொடங்கினும் அவ்விடத்துன்-பேரே வரும்" என்றவாறு) 'சீதை' யென்ற பேரே தன் வாயில் வருகிற தென்பது குறிக்கப் 'பேரெலாம் உமதேயாக்கி' என்முன்; தன் கண்பார்வை யெல்லாம் சீதை எதிரேயிருக்குங் காலத்தில், வேறெங்கும் செல்லாது அந்த உண்மைச்சீதையினிடத்திலேயே செல்லுதலும் மற்றைக்காலங்களில் உருவெளித்தோற்றச்சீதையிடத்திலேயே செல்லுதலுங் குறிக்க, 'கண்ணெலாம் நுங்கண் ஆக்கி' என்று கூறினுன்.

வெற்றியே பெற்றுவந்தவன் தோல்வியுற்றிடல், குளிர்ச்சிசெய்யும் சந்திரனும் தென்றலும் சூடுசெய்திடல் முதலிய இயற்கைக்குணங்கள் மாறி எதிரிடைக்குணங்களாகும் விபரீதங்கள் பலவற்றை முந்திய பாட்டில் அடுக்கிக்கூறிய இராவணன், (இந்தப்பாட்டில்) அவைபோன்ற வேறு சிலவற்றைத் தொடுத்துக்கூறுவானுய், பலபெண்களைக் காமித்த தான் (இராவணன்) ஒருபெண்ணையே (சீதையையே) காமித்தல், பலபொருள் களிற் பார்வைசெலுத்திய தன் (இராவணன்) கண்கள் ஒருபொருளையே (சீதையையே) பார்த்தல், பலரை எய்யும் காமன் ஒருவனையே (இராவணனை யே) எய்தல், பலருக்கும் புண்செய்த பஞ்சபாணங்கள் ஒருவனுக்கே (இரா வணனுக்கே) புண்செய்தலாகியவைகளைக் கூறி, இவ்விபரீத சம்பவங்களெல் லாம் என் திறத்தில் நிகழும்படி செய்திட்டீ ரென்றுனென்றவாறு.

'ஐங்கணை அரியத்தக்க புண்ணெலாம் எனக்கே ஆக்கி' என்றதனுல், மன் மதனுல் எய்யப்படுவான் இராவணனொருவனே யென்பது பெறப்பட்டது.

இந்தப்பாட்டில் 'நாமம்' 'விபரீதம்' என்ற இரண்டு வடசொற்க ளொழிய மற்றெல்லாச்சொற்களும் தமிழ்ச்சொற்களாக இருத்தல் கவனிக்கத்தக்கது. 'நாமத்(து) அண்ணல்' என்பதைப் 'பெயர் கொள் அண்ணல்' எனவும் 'விபரிதம் புணர்த்தி விட்டீர்' என்பதை

'வேற்றுமை புணர்த்திவிட்டீர்' என்றும் மாற்றிச், செய்யுளின் ஓசை கெடாமல் வடசொற்களை மிக எளிதாக நீக்கிவிடலாம். அவ்வாறு செய்யாமல், மன்மதன் பெருமையை அதிகப்படுத்துதற்கு 'நாமம்' என்ற வடசொல்லையும், இம்மாறுபாடுகள் சாதாரணமாறுபாடுக ளல்ல, அதிசயகரமான விசேடமாறுபாடுகளென்பதை நன்கு புலப் படுத்த 'விபரீதம்' என்ற வடசொல்லையும் எடுத்தாண்டிருக்கும் தகுதிப்பாடு, கருதத்தக்கது. இவ்விடத்து 'விபரீதம்' என்ற வட சொல்லாட்சி அதியுசிதமான பதப்பிரயோகத்துக்குச் சிறந்த உதாரணமாம். முந்திய பாட்டை 'இன்னம் என் என் செய்வித்துத் தீர்திர்' என்று முடித்திருப்பதும், இந்தப்பாட்டை 'விபரிதம் புணர்த்திவிட்டீர்' என்று முடித்திருப்பதும் நினையுந்தோறும் நிரம்ப உவகை விளைப்பனவாயுள்ளன.

பாடபேதம்: [1] எய்பவனும். [2] ஐங்கணைக்கு. [3] எமக்கே, எனதே. [4] புணர்த்து

[ மகேசுரன் முதலாக மானுடர் முடிவாகவுள்ளாரெல்லாரும் அஞ்சும்படி மூன்றுலகத்தும் ஆட்சிசெய்யும் யான், எல்லா வீரர் களையும் எதிர்த்துச்செயித்திருக்கின்றேன். அப்படிப்பட்ட யான் ஒரு பெண்மேல்வைத்த ஆசையாற் கொல்லப்பட்டேனென்றால், என் ஆண்மை பழுதுபட்டுவிடும். அது அவ்வாறு மாசுண்ணுகபடி காப்பீராக.

நான் பலபிறவிகளிற் செய்த நல்வினைப்பயனாக, அறக்கடவுள் அருளிய செல்வம்போல்பவரே, அமுதினு மினியவரே, உம் அருளைப் பெறுமையால், யான் பிறந்ததனலான பயனைப் பெறுமல், பிறந்தும் பிறவாதவனாக, இருக்கின்றேன். உம் அருளைப் பெறுமை யால் வருந்தித் துன்பந் தாங்கமாட்டாமல், பலமுறை யிறக்கலுற் றும், (நீண்ட ஆயுளுடையேனாகப்பெற்ற) வரபலத்தினால் பிழைத் திருக்கின்றேன். செத்துச்செத்துப் பிழைக்கும் என் இரங்கத்தக்க நிலைமை அறியத்தக்கார் யாரிருக்கின்றார். ]

103 அந்தர முணரின் மேனு ளகலிகை யென்பாள் காதல்
இந்திர னுரத்தைப் புல்கி யெய்தினு ளிழுக்குற் றளோ
மந்திர மில்லை வேறு மருந்தில்லை மைய னோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவ்வா யமுதலா லமுதச் சொல்லீர்.

கொண்டுகூட்டு: 'அமுதச்சொல்லீர்! அந்தரம் உணரின் மேனுள் அகலிகையென்பாள் (தன்னிடத்துக்) காதலையுடைய இந்திரன் உரத்தைப் புல்கியெய்தினுள்; (அவள்) இழுக்குற்றளோ? (இல்லை). மையல்நோய்க்குச் சுந்தரக்குமுதச்செவ்வாய் அமுதல்லால் வேறோர் மருந்தில்லை; மந்திரமில்லை.'

பொருள்: முன்காலத்தில் அகலிகையென்பாள் (தன்னிடத்துக்) காதலுடைய இந்திரன்மார்பைத் தழுவினுள்; அதனுல் அவள் தாழ்வடையவில்லை. (ஆதலால், நீர் அடியேனைத் தழுவினுல், உமக்கும் தாழ்வு வராது.) (உம்மால் எனக்கு நேர்ந்துள்ள) மையல் நோய்க்கு உமது அழகிய செவ்வாய் அமுதமன்றி வேறொரு மருந்தும் இல்லை; மந்திரமும் இல்லை.

அந்தரம் - நடுவுநிலைமை. அந்தரம் உணரின்-நடுவுநிலையோடு ஆராய்ந்து பார்த்தால். மேனுள் - மேல்நாள் - முன்னுள். உரம் - மார்பு. புல்கு - அணை-தழுவு. 'வந்தடைந்தான்' 'வந்தெய்தினுன்' என்பவைகளில் 'அடை' என்பதும் 'எய்து' என்பதும் துணைவினையாயிருத்தல்போல, 'புல்கி எய்தினுள்' என்பதில் 'எய்து' என்பது துணைவினையாயுள்ளது. இழுக்கு - தாழ்வு. மையல்நோய் - காமமயக்கமாகிய வியாதி.

சுந்தரம் - அழகு, குமுதம் - செவ்வாய்பல் - செவ்வல்லி. அமுதச் சொல்லீர் - அமுதம்போலும் (இனிய) சொற்களையுடையவரே.

விடநோய்க்கு, மணி (-விடம்நீக்குங் கல்) மந்திர ஒளடதங்கள் பரிகாரமென்பர். அதுபோல, மையல்நோய்க்குச் செவ்வாயமுதம் பரிகாரமென்ருன். 'மந்திரம் மருந்து (-ஒளடதம்)' இரண்டைக் கூறியதனுல், மூன்ரும் பரிகாரமான 'மணி'யை உபலக்கணத்தாற் பெறவைத்தார். 'செவ்வாய் அமுது', அதராமிர்தம், இதழமிர்தம் என்ற உதட்டுநீரை உணர்த்துவது. முற்பாதியில் அகலிகை இந்திரனை அணைந்தாளென்றும் பிற்பாதியில் 'மையல்நோய்க்கு மருந்து வாயமுத'மென்றும் கூறும் இந்தப்பாட்டு, காமோத்தீபககவி யென்னும் மோகமூட்டும் பாட்டாக வுள்ளது.

பாடபேதம்: [1] உணரான், உணரீர். [2] உணர்த்தப். [3] நல்கி.

## இராவணன் சீதையைத் தரையில்விழுந்து வணங்கல்.

[ இராவணன், மேற்கண்டவாறு கூறியபின், இருக்கைவிட்டெழுந்து, சீதையைநோக்கிச்சென்று நீலமலைபோன்ற இருபது தோள்களும் சூரியன்போன்ற பத்துக்கிரீடங்களும் தரையிற் படியச் சாட்டாங்கமாக வணங்கினான்.

## சீதை கூறல்.

சீதை, புலியைக்கண்ட மான்போலக் கலங்கி, மேனிமுழுதும் நடுங்கி, இவன் என்னைக் கொல்லும்படி நேர்ந்தாலும் நேரட்டும். என் மனக்கருத்தை நன்கு தெரியும்படி கூறுவேனென்று துணிந்து (அவனைத் துரும்பாகமதித்து) எதிரேகிடந்த புல்லைநோக்கிப் புகல்வாளானாள். ]

104 பழியிது பாவ மென்று பார்க்கிலை பகரத்தக்க
மொழியிவை யல்ல[1] வென்ப துணர்கிலை முறைமை நோக்காய்
கிழிகிலை நெஞ்சம் வஞ்சக் கிளையொடு மின்று காறும்[2]
அழிகிலை[3] யென்ற போதென் கற்பென்னு[4] மறந்தா னென்னும்.

கொண்டுகூட்டு: 'இது, பழி (ஆம்) பாவம் (ஆம்) என்று பார்க்கிலை. இவை, பகரத்தக்க மொழியல்லவென்பது உணர்கிலை. முறைமை நோக்காய். இன்றுகாறும், நெஞ்சம் கிழிகிலை, வஞ்சக்கிளையொடும் அழிகிலையென்றபோது என்கற்பு என்னும்? அறந்தான் என்னும்?

பொருள்: (பிறன்மனைவியை விரும்பும்) இச்செயல் (இம்மையில்) எல்லாரும் தூற்றும் பழியாம், (மறுமையில் நரகம்விளைக்கும்) பாவமாமென்று (ஆராய்ந்து) பார்க்கின்றாயில்லை. (நீ கூறிய) இந்த (அசுத்த அசப்பிய ஆபாச) வார்த்தைகள் (வாய்விட்டுச்) சொல்லத் தகாதவைகளென்பதை உணர்கின்றாயில்லை. (எவரெவரிடத்து எப்படி எப்படி ஒழுகவேண்டுமென்னும்) முறைமையைத் தெரிகின்றாயில்லை. (சொல்லத்தகாத சொற்களைச் சொல்லியும் செய்யத்தகாத செயல்களைச் செய்தும் உள்ள நீ, நெடுநாளைக்கு முன்பே

நெஞ்சு பிளக்கப்பட்டிருக்கவேண்டும்; உனக்குத் துணையான வஞ்சகச் சுற்றத்தோடும் மாண்டிருக்கவேண்டும், அப்படியில்லாமல் இன்றளவும் நீ நெஞ்சு பிளக்கப்படாதவனாய், உன் சுற்றத்தோடும் அழியாதிருக்கின்றாயென்றால், (உன் நெஞ்சைப் பிளந்து உன் சுற்றத்தோடு உன்னை மாய்க்காதுபோன) என் கற்பு இருந்தென்ன பயன்? (என் கற்பு ஒருபகுதியாக உள்ள) தருமந்தான் இருந்து என்னபயன்?

பகர்தல் - சொல்லுதல். மொழி - சொல். இன்றுகாறும் - இன்றுவரையும். அறம் - தருமம்.

பாடபேதம்: [1] அல்லது. [2] நாளை. [3] கழிகிலை. [4] போது கற்பெனும்.

[ ‘பேசத்தகாத பேச்சுக்களைப் பேசுதற்குப் பெருவாய்கள் பத்திருக்கின்றன. அவைகளைக் கேட்டற்கு யான் இருக்கின்றேன். நீ எதைத்தான் சொல்லமாட்டாய்? எதைத்தான் செய்யமாட்டாய்? *இந்திரன், பிரமன், முருகன், திருமால், சிவன் என்றவர்களை இலட்சியஞ்செய்யாமல் எதிர்த்துப்பொருது வென்றேனென்று பெருமைபாராட்டும் நீ, போர்க்களம்புகுந்தபோது, அச்சத்தினால் என் காதற்கனியான கணவனைக் (கண்ணெடுத்துப்பார்க்கமாட்டாமற் போனதனால்) கண்டாயில்லைபோலும். ]

105 ஊணிலா யாக்கை பேணி யுயர்புகழ் கெடவே யுன்முன்[1]
நாணிலா திருந்தே னல்லே னவையறு குணங்க ளென்னும்
பூணெலாம் பொறுத்த[2] மேனிப் புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலா மின்னு மென்னுங் காதலா லிருந்தேன் கண்டாய்.

கொண்டுகூட்டு: ‘ஊண் இ(ல்)லா யாக்கை பேணி, உயர் புகழ் கெட, உன்முன் நாண் இல்லாதிருந்தேனல்லேன். நவை அறு குணங்களென்னும் பூண் எல்லாம் பொறுத்த மேனிப் புண்ணியமூர்த்திதன்னை இன்னும் காணலாமென்னும் காதலால் இருந்தேன் கண்டாய்.

---

* தானுள பத்துப் பேழ்வாய் தகாதன உரைக்க இங்கே
யானுள(ன்) கேட்க என்றால் என்சொல்லாய் யாது செய்யாய்.

பொருள்: '(கூறத்தகாத வார்த்தைகளை நீ கூறுதலைக்கேளா மைப்பொருட்டு என் உயிர்விடாதிருக்கின்றேனென்றால், கேள். என் நாயகனைப் பிரிந்ததனால் யான் ஊண்வெறுத்திருத்தலால்) உணவற்றுள்ள உடம்பைப் பாதுகாத்துக்கொண்டு, (அவனைப் பிரிந்தவுடன் செத்து அடையும்) உயர்ந்த புகழ் ஒழிந்துபோகும் படியாக உன்னெதிரே வெட்கமின்றி (உயிர்தரித்து) இருந்தே னில்லை. குற்றமற்ற குணங்களென்னும் அணிகலன்களையெல்லாம் தரித்த திருமேனியையுடைய புண்ணியசொரூபியான இராம பிரானை இன்னும் காணலாமென்னும் ஆசையால் உயிரை வைத்துக் கொண்டு இருந்தேன். (நான் உயிரை விடாதிருந்தது, நாண மில்லாமையாலன்று; உயிர்மேலுள்ள விருப்பினாலுமன்று; இராம னைக் காணும் ஆசையினாலேயே என்று தெரிவாயாக.)

ஊண் - உணவு. யாக்கை - உடம்பு. நவை - குற்றம். பூண் - ஆபரணம். பொறுத்த - தரித்த. காதல் - ஆசை. கண்டாய், முன்னிலை அசை.

பாடபேதம்: [1] உயிர்செகா துளதே யுன்முன், உயர்புகழ் கெடவேயுன் முன், உயிர்செகா துளனு கின்றேன், உயர்புகழ் சுடாதுன் முன்னே. [2] பொறுக்கும். [3] என்னுமந்தக்.

106 சென்றுசென் றழியு[1]மாவி தரிக்கு[2]மாற் செருவிற் செம்பொன்[3]
குன்று[4]நின் றனைய தம்பி புறக்கொடை[5] காத்துநிற்பக்
கொன்றுநின் றலைகள் சிந்தி யரக்கர்தங் குலத்தை முற்றும்
வென்றுநின் றருளுங்[6] கோலங்[7] காணிய கிடந்த[8] வேட்கை.

கொண்டுகூட்டு: செருவில் செம்பொன குன்று நின்றனைய தம்பி புறக் கொடை காத்துநிற்ப, (என் நாயகன் உன்னைக்) கொன்று நின் தலைகள் சிந்தி, அரக்கர் தம் குலத்தை முற்றும் வென்று நின்றருளும் கோலம் காணிய கிடந்த வேட்கையால் சென்று சென்று அழியும் ஆவி தரிக்கும்.

பொருள்: '(நான் உயிர்விடாதிருத்தற்கு வேறொரு காரணமு முண்டு, அதையும் கூறுகிறேன். கேள்) போர்க்களத்திலே (என்

நாயகனுடைய) தம்பி (இலக்குமணன்) நீ முதுகுகாட்டி ஓடித் தப்பிப்போகவிடாமல் தடுத்துநிற்க, (எம்பெருமான்) உன்னைக் கொன்று (குவியலாக) உன் தலைகளைப் பூமியில் வீழ்த்தி, அரக்கர் கூட்டமனைத்தையும் வென்று (வீறுற்று) நிற்கும் (வீரசௌந்தரிய) கோலத்தைக் காணவேண்டுமென்ற விருப்பத்தினால் பலமுறை (உடம்பைவிட்டுச்) சென்று அழிந்தொழிந்துபோந்தன்மையுடைய என் உயிர் (அழிந்துவிடாமல் உடம்பிலே) தங்கியிருக்கின்றது' (என்றாள்).

தரித்தல் - தங்குதல்; நிலைபெற்றுநிற்றல். செரு - போர். ஆகுபெயராய்ப் போர்க்களத்தை உணர்த்தியது. செம்பொன்குன்று நின்றனைய - செம்பொன் மயமான மேருமலை நின்றாற்போல. புறக்கொடை - போரில் முதுகுகாட்டி ஓடுதல். காத்து - தடுத்து. காணிய - காணும்படி. வேட்கை- விருப்பம்.

திருவவதாரப்படலம் 'மசரத' என்ற ௨௨-ஆம் பாட்டில், 'தசரதன் மதலையா வருதும் தாரணி' என்பதில், 'தாரணியில்' எனற்பாலது, 'இல்' என்னும் ஏழனுருபு தொக்குத் 'தாரணி' என நின்றதுபோல, இங்கே, 'வேட்கையால்' எனற்பாலது 'ஆல்' என்னும் மூன்றனுருபு தொக்கு 'வேட்கை' என நின்றது. மேற்குறித்த படலம் 'கருமுகில்' என்ற கஙு-ஆம் பாட்டில் 'வருவதுபோல்' என்பது 'வருவபோல்' என நின்றதுபோலக் 'கிடந்தது வேட்கை'—என்பது, 'கிடந்தவேட்கை' எனக் கடைகுறைந்து நின்றது எனக் கொண்டு அதற்கியையப் பொருள்கூறலுமாம்.

'ஆவி திரிக்கும்' என்ற பாடங்கொண்டு 'ஆசையானது, (துயரமிகுதியால் உடலை)விட்டு நீங்கி அழிவதாகின்ற (என்) உயிரைத் திரும்பிவிடச் செய்யும்' என்று உரைகூறலுமுண்டு. இந்தப்பாட்டு, பாட்டின் கடையடியின் இறுதிப்பகுதியை முதலடியின் முதற்பகுதியுடன் பொருத்திப் பொருள் கொள்ளும் பூட்டுவிற்பொருள்கோள் அமைந்தது.

பாடபேதம்: [1] நின்றிழியும். [2] திரியும், திரிக்கும், தெரிக்கும். [3] சேமக். [4] கன்று. [5] புறக்கடை, பிறர்குடை, தனிக்குடை. [6] நின்றனைய. [7] காலம். [8] கிடக்க.

## இராவணன் கோபித்துக்கூறல்.

[ மேற்கூறியவாறு சீதை கூறக் கேட்ட இராவணன், தன்னைக் கொல்லமுயன்றாற்போன்ற மானம் (-ரோஷம்) உண்டாகக் கொடுங் கோபங்கொண்டு 'என்னை வென்று இராமன் உன்னை மீட்டியபின் இருவருக்கும் உயிரொன்றென்னும்படி அவனுடன் ஒருமித்து வாழ்வாய்போலும்! இராமன் என்னை வெல்வது இயலாதகாரியம்' என்று பேரிடிபோலப் பேரோசையுண்டாகப் பரிகாசமாகச் சிரித்தான்.

'கூட்டங்கூட்டமாகப் பூலோகத்திலும் தேவலோகத்திலும் (வேறெந்த லோகத்திலும்) உள்ளவர்களுள் என் கோபத்திற்கு இலக்கானவர்கள் யாவர் தப்பிப்பிழைத்தவர்? நீ, திருமாலின் அவதாரமென்று மகிழ்கின்ற இராமன் உன் மனத்துக்குள்ளே புகுந்து ஒளித்துக்கொண்டானானாலும், நான் கொன்றுவிடுவேன். குரங்குகள் கடலை அணைகட்டின; இலங்கைமதிலை வளைந்தன; போர்முழக்கம் புரிந்தன என்று களிக்காதே. என் முன் அவைகள் விளக்கின்முன் விட்டில்களாம். "அயோத்தி சென்று அரசகுலத்தினரனைவரையும் பிடித்துக்கொண்டு வாருங்கள்; அல்லாவிட்டால், அவர்களைக் கொன்று அவர்கள் தலைகளைக் கொணருங்கள்" என்று அரக்கர் சிலரை அனுப்பியிருக்கிறேன். வேறு சிலரை விரைந்து மிதிலைக்குப்போய் உன் தந்தையைக் கொணரும்படி செலுத்தியிருக்கின்றேன்' என்று (சாதுரியமாகப் பேச்சோடு பேச்சாகவும் பக்கத்தில் மறைந்து காத்துக்கொண்டிருக்கும் மகோதரனும் மாயாசனகனும் சீதைக்கெதிரே வருதற்குச் சமிக்கையாகவும்) இராவணன் கூறினான்.

## இராவணன் கூறியதைக் கேட்ட சீதைமனநிலை.

இவ்வாறு இராவணன் கூறக் கேட்ட சீதை, இராமலக்கு மணர் காக்க வாழ்ந்த என்னை வஞ்சனைசெய்து சிறைப்படுத்தியவனுக்குச் செய்யமுடியாத தொன்றுமில்லையென்றஞ்சி நெடுமூச்செறிந்து, நெஞ்சுகொதித்து, நெருப்பைத் தின்று தின்று உமிழ்வார்போல மிகுந்த துன்பமடைந்தாள். கண்ணீர் வெள்ளமாகச் சொரிந்தாள். காட்டிலே என்னை இந்தக் குறைவுகளடையச்செய்த,

வலிமைமிகுந்த விதியார், நாட்டிலே அவர்களை* அந்தக்குறைகளை† அடையச்செய்தற்கு வலிமைகுறைந்தவரா? (நல்லோர் பிரதிகூலமும் தீயோர் அனுகூலமும் அடையும்படியானதனால்) தருமம் பொய்த்தது என்று எண்ணி மனங்கசந்தாள்.

## திகைத்திருக்கும் சீதைமுன், மகோதரன் மாயாசனகனைக் கொண்டுவருதல்.

மகோதரன், இதுவே ஏற்றசமயமென்று, சனகனுருவமெடுக்கச்செய்திருந்த மருத்தனாகிய மாயாசனகனை வாய்திறந்து கதறியழச்செய்து சிறையாய்ப்பிடித்துக்கொண்டுவந்து இராவணனெதிரே காட்டினான். மாயாசனகன் இராவணனை வணங்கக் கண்ட சீதை 'தாய் எரி வீழக் கண்ட பார்ப்(பு) எனத் தரிக்கிலாதாள்'‡ ஆனாள்.]

## மாயாசனகனைக்கண்டு சீதை வருந்தல்.

107 கைகளை நெரித்தாள் கண்ணின்[1] மோதினாள் கமலக் கால்கள்
நெய்யெரி மிதித்தா லென்ன நிலத்திடைப் பதைத்தாள் நெஞ்சம்
மெய்யென வெரிந்தா [2]ளேங்கி விம்மினா ணடுங்கி[3] வீழ்ந்தாள்
பொய்யென வுணரா ளன்பாற் புரண்டனள்[4] பூச விட்டாள்.

கொண்டுகூட்டு: பொய்யென உணராள், அன்பால் கைகளைநெரித்தாள்; கண்ணில் மோதினாள்; கமலக்கால்கள் நெய் எரி மிதித்தாலென்ன நிலத்திடைப் பதைத்தாள்; நெஞ்சம் மெய்யென எரிந்தாள்; ஏங்கி விம்மினாள்; நடுங்கி வீழ்ந்தாள்; புரண்டனள்; பூசவிட்டாள்.

---

* அவர்களை - அயோத்தியிலும் மிதிலையிலுமுள்ள அரசகுலத்தினரை.

† அந்தக்குறைகளை - இராவணன் செய்விப்பதாகச்சொல்லிய குறைகளை.

‡ தாய் - தாய்ப்பறவை. பார்ப்பு - பறவைக்குஞ்சு. தரிக்கிலாதாள் - மனம் தாங்கமாட்டாதவள்.

பொருள்: சீதை (தான் கண்டது) பொய்யென உணராளாய், (தந்தைபாலுள்ள) அன்பினால் (அவன் சிறைப்பட்டதைக் காணச் சகியாளாய்த் துன்பமிகுந்து) கைகளை நெரித்தாள்: (பின்பு, இந்தக் காட்சியைக் காணும்படி இருந்தனவே இந்தக்கண்களென்று அந்தக் கைகளைக்கொண்டு அந்தக்) கண்களில் அறைந்துகொண்டாள். தாமரைமலர்போன்ற பாதங்கள் நெய் (வார்க்கப்பட்டு) எரியும் நெருப்பின்மேல் மிதித்தாற்போலப் பூமிமீது (தரிக்க முடியாமல்) துடித்தாள். (தான்கண்டது) மெய்யென்று (நம்பி) மனங்கொதித்தாள். ஏக்கங்கொண்டு தேம்பியழுதாள். நடுங்கி (நிற்கமாட்டாமல் கீழே) விழுந்தாள்; (துக்கத்தால் இடைகொள்ளாமல்) புரண்டாள்; அலறிக்கதறினாள்.

பதைத்தல் - துடித்தல். பூசலிடல் - பேரொலிபடக்கதறுதல் - அலறுதல்.

கைநெரித்தல், கண்ணில்மோதல், பதைத்தல், ஏங்கல், விம்மல், நடுங்கல், புரளல், கதறல், ஆகிய இவைகள் துன்பமுற்றவர் மெய்ப்பாடுகள். மெய்ப்பாடுகள், உள்ளத்து நிகழ்ச்சிகளைத்தெரிவிக்கும் உடற்செயல்களும் தோற்றங்களுமாம்.

சோகரசமென்றும் அவலச்சுவையென்றும் சொல்லப்பட்ட துன்பவுணர்ச்சியின் வருணனையாகவுள்ளது இந்தப்பாட்டு.

பாடபேதம்: [1] கண்ணை. [2] இருந்தாள். [3] வீங்கினளோங்கி. [4] புரண்டரும்.

## சீதை வாய்விட்டரற்றல்.

[ 'ஆ தெய்வமே!' என்பாள். 'சத்தியம் அழிந்ததோ!' என்பாள். (அடங்கும் அறக்கற்பைக் கைவிட்டு ஆக்கிரமிக்கும் மறக்கற்பை மேற்கொண்டு) 'உலகம் எரிந்துபோகும்படி சபிக்கட்டுமோ!' என்பாள். 'நான் இனி உயிரோடிருப்பேனோ!' என்பாள்;

இப்படிக்கூறிப் பலபடியாகத் துன்பமுற்றுச் சோர்வடைந்தது; (தருமம் உருவெடுத்தாற்போன்ற) பெண்தானோ? (உண்மைத்) தருமமேதானோ? அந்தச் சீதாதேவி உற்ற தன்மையை அறிவார் யாரே! சோர்ந்தவள், திரும்பவும் ஆற்றுவாளாய் 'என் ஐயாவோ! என் ஐயாவோ! (எனக்கேயன்றி) எல்லா உலகத்தோருக்கும் அப்பனும் அம்மையுமானவனே, தருமமூர்த்தியே, தவசொரூபியே என் நிமித்தம் உனக்கு (பகைவர்கைக்குட்சிக்கும்) பொல்லாங்கு நேர்ந்ததே! நீ என்னைப் பெற்றதனால் பெற்ற பேறு இதுதானோ!' என்று பிரலாபித்து, கற்பகக்கொம்பு தீப்பற்றியெரிந்து சாய்ந்து வீழ்ந்ததுபோலத் தரையில் விழுந்து, துன்பத்தில் அழுந்தி, இறந்தனளோவென் றெண்ணும்படி சிறிதுநேரம் உணர்வும் உயிர்ப்பும் ஒய்ந்துகிடந்து, திரும்ப எழுந்து, சனகனைக்குறித்துப் புலம்புகின்றாள்:

### சீதை மாயாசனகனைநோக்கிக் கூறல்.

'வேதநெறி தவறாத ராசமுனியே! பெண்ணுக்குப் பிறந்தகத்தார் செய்யவேண்டிய (வரிசைமுதலிய) கடப்பாடுகளை நீ அயோத்திக்கு வந்து செய்ய வாயாதுபோயிற்று. உன் பெண்ணைச் சிறையிலே காணுதற்கு நீயும் சிறைப்பட்டு வந்தாயோ! என் சிறையை நீக்குவாரைக் காணேன். யான் காரணமாகச் சிறைப்பட்ட உன் சிறையை மீட்பார் உலகத்திலே யார் இருக்கின்றார்! பகையுடைமை, துரதிட்டம். அதனினும் நல்வினத்தைச் சேராத பகைவரையுடையராதல் அதிகமான துர்ப்பாக்கியம். நீ பகைவராற் சிறைப்படுத்தப்பட்டதைக்காட்டிலும் கொல்லப்பட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும். வேந்தரானோருள் மேலானோர் மதிக்கும் பெருமை பெற்ற நீ, பகைவர் கைக்குட் சிக்கி எல்லாரும் பழிக்கும் சிறுமையுற்றாய்! உன் பெருமைக்கு நீ காரணம். சிறுமைக்கு நான் காரணம். நீ என்னைப் பெண்ணாகப் பெற்றதனால் பழிப்புக்குப் பாத்திரனானதுபோல, வேறு யாவர் ஆகியிருக்கின்றார்?' நான்

பகைவனைப் பற்றுண்டபோதே உயிரை விட்டுவிடாததனால், (நீயும் மற்றும் என் பிறந்தகத்தும் புக்ககத்தும் உள்ளவரும் அடிமைக்களாக்கப்படுதற்குக் காரணமானேனாதலால்) உங்களெல்லாரையும் அடிமைகளாக விற்றுப்பிழைப்பேனாய் மீளா நரகத்துக்கு ஆளாயினேன்.

'யான், சிறைப்பட்டவுடனே செத்திடாமல், பத்துமாதம் உயிரோடிருந்து வருந்தியது, எம்பெருமானால் பகைவர்கள் அழிக்கப்படுவதைக் கண்டு களித்து அவன் திருவடிகளைச் சூடும் ஆசையால். அவ்வாறு பகைவரை அழிப்பதற்கு மாறாக, உன்னை வமிசத்தொடும் அழியச்செய்தேன். அயோத்தி அரசர் புகழை அடியோடு விழுங்கிவிட்டேன். ]

108 கொல்லெனக் கணவற் காங்[1]கோர்
கொடும்[2]பகை கொடுத்தே னெந்தை
கல்லெனத் திரண்ட தோளைப்[3]
பாசத்தாற் கட்டக் கண்டேன்
இல்லெனச் சிறந்து நின்ற
விரண்டுக்கு மின்னல்[4] சூழ்ந்தேன்
அல்லனோ வெளிய னோ[5]யா
னளியத்தே[6] னிறக்க லாதேன்.

கொண்டுகூட்டு: 'கொல்லெனக் கணவற்கு ஆங்கு ஓர் கொடும்பகை கொடுத்தேன், எந்தை கல் எனத் திரண்ட தோளைப் பாசத்தால் கட்டக் கண்டேன், இல் எனச் சிறந்துநின்ற இரண்டுக்கும் இன்னல் சூழ்ந்தேன் அல்லனோ? யான் எளியனோ? இறக்கலாதேன், அளியத்தேன்.'

பொருள்: என் நாயகனுக்கு 'கொல்வாயாக' என்று கூறி ஒரு பகைவனைக் கொடுத்தேன். மலைபோன்ற என் தந்தைதோள்களைக் கயிற்றினாற் கட்டச்செய்தேன். இல்லகம் என்று சொல்லும்படி

சிறந்த (பிறந்தகம் புகுந்தகம்) என்ற இரண்டகங்களிலுமுள்ளவர்களுக்கும் துன்பமுண்டாகும்படி செய்தேன். (இவைகளெல்லாஞ் செய்தேன்) அல்லலேனோ? (இப்படிப்பட்ட) யான் இலேசானவளா! (இந்நிலையில்) உயிரை விடாதிருக்கின்ற யான் காக்கப்படத்தக்கே னல்லேன்.

ஆங்கு - அங்கே - பஞ்சவடியில், அசைநிலையுமாம். பாசம் - கயிறு. கண்டேன் - செய்தேன். இரண்டு, ஆகுபெயராய் இரண்டு அகங்களிலுமுள்ளவர்களைக் குறித்தது. இன்னல் - துன்பம். சூழ்ந்தேன் - உண்டாக்கினேன். 'தங்கினோர் யாவர்க்குங் கேடுசூழார்' (நீதிநெறிவிளக்கம். அங.) சூழ்தல் - பண்ணுதல் - செய்தல் (தமிழகராதி). அளியத்தேன் - இரங்கத்தக்கேன்; காக்கப்படத்தக்கேன். இரங்கத்தகாதேன், காக்கப்படத்தகாதேன் என்பவை குறிப்புப்பொருள். இறக்கலாதேன் - சாவாத யான்.

'என் நாயகனை "மாயமானைப் பிடித்துத்தா" என்று சொல்லி என்னைப் பிரியச்செய்து, இளையபெருமானை அவனுக்குத் துணையாகப் போகும்படிசெய்து, அவனும் என்னைப் பிரியச்செய்து, யான் துணையற்றுத் தனியளாகி, இராவணனாற் கவரப்பட்டேன். இதனால் இராமனுக்கு இராவணன் பகையாயினான். பகைவன் கூடுமானால் கொல்வானாதலால், "(இராவணா! என் நாயகனைக்) கொல்வாயாக" என்று சொல்லி என் நாயகனுக்கு (இராவணனை) ஒரு பகைவனை (உண்டாக்கி)க் கொடுத்தேன்' ஆனேன் என்பாள், 'கொல்லெனக் கணவற் காங்கோர் கொடும்பகை கொடுத்தேன்' என்றாள். தன் காரணமாக, இராவணன் தன் தந்தையைக் கட்டிக் கொணரச்செய்தானாதலால், 'எந்தை..........தோளை.......... கட்டக்கண்டேன் (- செய்தேன்)' என்றாள். தானே காரணமாகத் தந்தைக்கும் கணவனுக்கும் நேர்ந்த கேடுகளோடு அவ்விருவர் குடும்பத்தார்க்கும் இராவணனால் நேரக்கூடிய கேடுகளை நினைந்து 'இல்லெனச் சிறந்துநின்ற இரண்டுக்கும் இன்னல்சூழ்ந்தேன்' என்றாள்.

எதிர்பாராத கேடுகள் விளைதற்குக் காரணங்களாகவும் தம்மியல்பிற் குற்றமற்றவைகளாகவுமிருந்த தன் செயல்களைக் கேடுவிளைக்கவேண்டுமென்று தான் எண்ணியே செய்தாற்போல; தன்னைக் குற்றப்படுத்திக்கூறினாள் சீதை யென்பது தெளிவு.

'அல்லனோ' என்பது 'கொடுத்தேனல்லனோ', 'கண்டேனல்லனோ' 'சூழ்ந்தேனல்லனோ' என இயையநிற்றல் காண்க. எளியேனல்லேனென்று பொருள்படும் 'எளியனோ' என்பதில், ஓகாரம் எதிர்மறை. 'இரங்கத்தக்கேன், காக்கப்படத்தக்கேன்' என்ற பொருள்களுடைய 'அளியத்தேன்' என்பது முன்பின் தொடர்ச்சியால் 'இரங்கத்தகாதேன், காக்கப்படத்தகாதேன்' என்ற பொருள் தரல் கவனிக்கத்தக்கது.

' "மாயமானைப் பிடித்துத்தா" என்று ஸ்ரீராமபிரானைக் கேட்டதே அவ்விராமன் தன்னைப்பிரிந்து பெருந்துன்பத்திற்கு உள்ளாகக் காரணமானதால், அச்சொல்லையே "கொல்லெனக் கணவற்காங்கோர் கொடும்பகை கொடுத்தேன்" என்று சீதை கூறினாள்'. என்று முதலடிக்குப் பொருள்விளக்குதலுண்டு.

பாடபேதம்: 1 ஈங்கு, இங்கு. 2 நெடும். 3 தடந்தோளீர்த்துப், சிறந்ததிண்டோள். 4 இறுதி. 5 எளியளோ. 6 அளியற்றேன். 7 இருக்கலாமோ, அயர்க்கலாமோ, நிற்கலாமோ.

' 'ஒல்லையிற் சடாயுவேந்த னுயிரினைக்குறைத்தேன் றாய' என்று ஒரு பிரதியில் இரண்டாமடி காண்கிறது'. வை. மு. கோ.

திருநெல்வேலிக் கவிராயரவர்கள்வீட்டு ஏட்டுப்பிரதியில் மேற்கண்ட 'ஒல்லையிற்சடாயு' என்ற அடி நான்காம் அடியாக உள்ளது; 'அல்லனோ எளிய' என்ற அடி இல்லை.

[ யாகஞ்செய்து என்னை மகளாகப்பெற்ற தந்தை தோள்கள் கட்டப்பட்டுப் புழுதியிற் புரளக்கண்ட யான், மணஞ்செய்து என்னை மனைவியாகப்பெற்ற கணவனையும் அவ்வாறு கண்டாலன்றி

யொழிவேனோ! (பாவியேன் அந்தக் கண்ணராவியையுங் காணும் படி செய்தபின்பே என் கொடிய விதி என்னைக் கொல்லும்போலும்.) (என்தாய் சிறியதாய் முதலிய) தாய்மாரே! (சிறியதந்தை, குடும்பப் புரோகிதர் முதலிய) ஐயன்மீரே! (சிறியதந்தையின் பெண்களாகிய) தங்கையீரே! என் தந்தைக்கு நேர்ந்தது யாதும் தெரிந்திலீரோ! உங்களுக்கும் ஆபத்துநேர்ந்ததோ! ஒருகால் இறந்துபோனீரோ. உங்களுக்கு வரும் விபத்தைத் தெரிவிக்கவும் நீக்கவும் உங்களிடத்தே அனுமன் உளனோ? (அவனிருந்தால் எல்லீரும் பிழைத்திருப்பீர்.) என் தந்தையைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்தவர்கள், விரதத்தினால் இளைத்த பரதனைப் பற்றுதல் நிச்சயம். பரதன் பற்றப்பெற்றபின் இராமன் வாழான்; இலக்குமணனும் வாழான். அந்தோ! அறநெறிவழுவாதொழுகுவார் அடையும் பயன்கள் இவைகள் தாமோ! வானரசேனை கடலை அடைத்ததென்றும் மதிலை வளைத்ததென்றும் அரக்கருயிரைக் குடித்ததென்றும் கூறக்கேட்டு நான் கட்டிய மனக்கோட்டையை (எனது பொல்லாத) விதி இடித்துவிட்டது' என்று சோர்வுற்றிருந்தாள்.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

# யவனர்வரலாறு.

[ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை, B.A., (Lond.) அவர்கள்.]

[36-ஆம் தொகுதியின் உசஅ-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

## கல்பா.

நீரோ இறந்தபின் ஒருவர்பின் ஒருவராக நான்கு தலைவர் ஒரே யாண்டில் தனிக்கோலோச்சினர். கல்பா தன் படையோடு ஐபீரியா நாட்டினின்றும் புலம்பெயர்ந்து உரோமாபுரத்தைநோக்கிச் செல்ல நகர்காவலர் கல்பாவை வேந்தனென வாழ்த்தினார்கள். மேன்மக்கட்சபையும் கல்பாவுக்குத் தனிக்கோலுரிமையை அளித்தது. கல்பா நல்லொழுக்கமுடையோனாயினும், தனிக்கோலோச்சும் ஆற்றல் இல்லாதவன்; தலைவர்கள் பலதிக்கிலும் பகைத்தெழுந்தமையாற் கெட்டான்; வயது முதிர்ந்து அரசியலை நடத்தத்தக்க அநுபவமுடையவனாயிருந்தான்; கல்பா அரசுகட்டிலேறுமுன்னர் றையின் நதிப்பக்கத்துத் தலைவன் தனிக்கோல் தனக்கே உரியதென முழங்கினன். இஃதொருபுறமாக, நகர்காவற்றலைவன் நிம்பிடியஸ்சபினு தான் தனிக்கோலன் காயஸ் என்பவனுடைய காமக்கிழத்தியின்குமாரனெனக்கூறி அரசுரிமையைப்பெற விழைந்தான். கல்பா காவற்படைக்குக் கொடையளிக்க வாக்குக்கொடுத்தமையால் காவற்படைவீரர் கல்பாவைத் தனித்தலைவனெனத் தொழுதனர். கல்பா உரோமாபுரத்தை அணுகிக் கடல்வீரரைச் சந்தித்துப் பகைஞரெனக்கருதிப் பொருதான். பலதிக்கிலும் பகைவரெழுந்தமையாலும் கல்பா வயோதிகனாகையாலும் மேன்மக்கள் அவனை இளங்கோ ஒருவனை நியமிக்கும்படி வேண்டினர். கல்பா பிசோ என்பவனுக்கு இளங்கோப்பட்டத்தை அளித்தான். ஓதோ இத்துணையும் கல்பாவுக்குத் துணைபுரிந்தோனாயினும் தன்னை இளங்கோவாக்காமையால் கல்பாவைப் பகைத்துத் தன் படைவீரரைத் தன்னைத் தனித்தலைவனாக்கும்படி தூண்டினான். காவற்படைத் தலைவர் 'ஓதோ வாழி' என ஏத்தினாராதலின், கட்சியுத்தம் தொடங்கியது. கல்பாவுக்குத் துணைவரில்லாமையால் கொல்லப்பட்டான். மேன்மக்கட்சபையோர் உடனே ஓதோவுக்குத் தலைமைப் பதவியை அளித்தனர்.

## ஓதோ.

ரைனின்நதிப்பாசறையிலிருந்த படை தம் படைத்தலைவன் விற்றேலியனைத் தனித்தலைவனாக்க எண்ணினார்கள். விற்றேலியஸ் தனிக்கோலோச்ச எண்ணியிருக்கவில்லையாயினும், படைவீரர் தூண்ட உரோமாபுரத்தை நோக்கினான். ஓதோ போர்க்கெழுந்து கைக்கீனா என்னும் எதிர்க்கட்சித்தலைவனை வென்றான். பின்பு ஓதோவின் படையும் கைக்கீனாவின் படையும் பிறமோனாநக ரண்மையிற் சந்தித்துப் பொருதன. போர்முடிவில் ஓதோவின் படைவீரர் தோற்றோடினார்கள். ஓதோ தன் கட்சியார் தோற்றா ரென வுணர்ந்து உயிர்நீத்தான். ஓதோவைப் பொதுமக்கள் வெறுத்தனர். ஆகலின் கல்பாவின் சிலைகளுக்குக் கண்ணியும் தாரும் சூட்டித்தொழுதார்கள். விற்றேலியஸ் தன் கட்சியார் வென்றனரெனக் கேள்வியுற்று 60000 படையோடு கல்லியர் நாட்டுக் கூடாகச்சென்று உரோமாபுரத்தை யணுகினான். விற்றே லியனை யாவரும் தனிக்கோலனென வணங்கினார்கள்.

## வெஸ்பாசியன் வரவு.

மேற்குநாட்டுப்படைகள் தத்தம் தலைவர்களைத் தனிக்கோல ராக்கியதை அறிந்த கிழக்குநாட்டுப்படைவீரர் தம் தலைவர்களைத் தனிக்கோலராக்க எண்ணினார்கள். கீழ்பாலிருந்த படை லமூசியா னுஸ் என்பவனைத் தனிக்கோலனென வாழ்த்த, அவன் மறுத்தா னாக, யூடியாநாட்டுத்தலைவன் பிளாவியஸ் வெஸ்பாசியனைத் தனிக் கோலனாக்கினர். எகிப்துநாட்டிலுறைந்த சேனை வெஸ்பாசிய னுடைய கட்சியைச் சார்ந்தது. மூசியானுஸ் இலிறியாநாட்டை யடைந்து வட இத்தாலியநாட்டை நோக்கினான். கைக்கீனா மூசி யானனுடைய கட்சியைச் சார்ந்தானாக, அவனுடைய படை தலைவ னுக்குக் கீழ்ப்படியாமல் பகைவரோடு பொருதது. வெஸ்பாசிய னும் தனது தானையோடு கிறமோனாவை அடைந்தான். பெற்றி யாக்கத்தில் நிகழ்ந்தபோரில் விற்றேலியனுடைய கட்சியார் தோற் றனர். அத்தோல்வியைக் கேள்வியுற்ற விற்றேலியஸ் வெஸ்பாசி யனை ஆணைசெலுத்தவிட்டுத் தனது அதிகாரத்தைத் துறக்க வெண்ணினான். ஆனால் அவனுடைய கட்சியோர் போரைத் தொடரும்படி அவனை உரோமாபுரத்தில் நிறுத்தினர். வெஸ் பாசியன் தலைநகரைச் சூழ்ந்து பொருது தீயிட்டான். போரில் 50000 வீரர் மாண்டனர். விற்றேலியனுந் துஞ்சினான்.

## கல்லியர்விரோதம்.

இங்ஙனம் இத்தாலியதேசத்தில் கட்சியுத்தம் நடக்கும் தருணம்பார்த்துக் கல்லியரும் றைபின்நதிச் சர்மானியரும் தம் சுயாதீனத்தைப் பெறுதற்கு முயன்றனர். யுலியஸ் சிவிலிஸ் என்பவன் வெஸ்பாசியனுடைய கட்சியைச்சார்ந்தான்போல் நடித்துப் படைகள் சேர்த்தான். அவன் கல்லியரிடம் துணைபெற்று வெற்றானு நகரை மோதியபின் பட்டாவியத்தில் தங்கினன். கல்லியநாட்டில் கிளாசிக்கஸ் என்பான் கல்லியர்யாவரையும் உரோமருக்கு விரோதிகளாக்கிப் படைசேர்த்தான். சர்மானியர் கல்லியருக்குத் துணைசெய்யவில்லை. பகைப்படைகளை அடக்கும்படி வெஸ்பாசியன் சேறியாலிஸ் என்பவனை ஒரு படையோடு அனுப்பினன். செறியாலிஸ் வெற்றானுவில் சிவிலிஸ் என்பவனுடைய பகைப்படையை வென்றான். சிவிலிஸ் வேறுதுணைப்படைகள் பெறாமையால் றைபின் ஆற்றுக் கட்டை பிடித்து, பட்டாவியத்தைக் காவல்செய்தான். ஒருபால் பிளையும் ஒருபால் ஆறும் அந்நாட்டிற்கு இயற்கையரண்களாயின. செறியாலிஸ் கிளாஸிக்கஸின் படையை அடக்கிச் சிவிலிஸ் என்போனுடைய படையையும் அடக்கிக் கல்லியர்நாட்டில் உரோமருடைய ஆணையைச் செலுத்தினன்.

## எரிசலம்நகர்.

யூதசமயம் தழைத்தோங்கியநகர் எரிசலம். யூதசமயத்தின் கொள்கைகளைப் பழையேற்பாடு என்னும் நூலில் வாசித்தறியலாம். யூதர் ஒரு தனிக்குழுவினர். யாக்கோப்பு என்பவன் தனது நாடு வற்கடஞ்சென்றதாக, குடும்பத்தோடு எகிப்திற்குச் சென்று எகிப்து மன்னருக்குத்தொண்டுசெய்து ஆங்குப்பலகாலமிருந்தனனென்றும் அவர்சந்ததியார் அடிமைகளாகவே எகிப்துநாட்டோரால் எண்ணப்பட்டனர் என்றும் யூதரின் கடவுள் யெகோவா கருணைகூர்ந்து எகிப்துமன்னனைத் தண்டித்துப் பலநோய்களால் வருத்தியபின் மோசேஸ் என்னுந் தலைவனுக்கு சைனாயிக் குன்றிலெழுந்தருளி யூகாது பத்து ஒழுக்கப்பிரமாணங்களையும் அறைந்து யூதரை எகிப்திலிருந்து யூடியாநாட்டுக்கு அழைத்துச்செல்லும்படி

கற்பித்ததென்றும் யூதவரலாறுகள் கூறும். யூதர் அவ்வாஞ்ஞைப் படி செங்கடலைத் தாண்டினரென்றும் எகிப்தியப்படை பின்தொடர அவரைக் கடல் பெருகி அழித்ததென்றும், யூதருக்குக் கடல்வற்றி வழிகொடுத்ததென்றும் அறிகிறோம். இவ் யூதரின் பழக்கவழக்கங்களும் ஆசாரங்களும் யூடியாநாட்டு அயலோரின் ஒழுக்கங்களோடு மிகவும் வேற்றுமையானவையென்றும், அது காரணமாக யூதரைப் பிறசாதியர் வெறுத்தனரென்றும், யூதரும் ஏனையோரைக் கானவர் எனப் பழித்தனரென்றும், யூதருக்குக் கடவுள் பகைவருடைய நகரங்களை அழிக்கவும் பகைவரை வெல்லவும் உதவி செய்து அரசியலை நடத்தற்குத் தலைவரையும் நியமித்தாரென்றும் அறிகிறோம். அத்தலைவர் பின்னர் மன்னரானார்கள். அம்மன்னருள் சலோமன் எரிசலத்தைக் கட்டினான். யூதர் பன்றியிறைச்சியுண்ணாமையாலும் விருத்தசேதனம் என்னும் நுனித்தோலைக் கத்தரிக்கும் கிரியை செய்தமையானும் உரோமரும் யூதரை வெறுத்தனர். யூதரும் தம் சுயாதீனத்தை ஒருநாளைக்குப் பெறலாமென எண்ணினாதலின், தம் கடவுள் தலைவராக ஒருவரை அருளுவரென்று எதிர்பார்த்திருந்தனர். ஏசுக்கிறீஸ்துவைத் தீர்க்கதரிசியென யூதர் எண்ணவில்லை. ஆகலின் யூதர் அவரைக் கொன்றனர். யூதர் போர்த்தொழில் வல்லோராதலால் எரிசலத்தை அரண்களாலும் மதில்களாலும் காவற்படுத்தியிருந்தனர். காயஸ் கடிகூலாவை யூதர் நனிவெறுத்தனர். கி. பி. 66-ஆம் ஆண்டு எரிசலம்நகரில் இருகட்சியர் கலகப்பட்டனர். ஒருசாரார் உரோமருக்கு அமைந்து வாழவிரும்பினர். அனேனியாஸ் என்னும் பூசாரித்தலைவனும் இக்கட்சியைச்சேர்ந்தோன். வேறொரு சாரார் உரோமரோடு பொருது தம் சுயாதீனத்தைப் பெறவிரும்பினர். இக்கட்சியோர் சமயாபிமானிகள். மறவர் கள்வர் ஆறலைப்போர் முதலியோர் என்ப. அனேனியாஸ் என்னும் குருவின் மகன் எலியாசர் இக்கட்சியைச் சேர்ந்தான். அனேனியாஸின் கட்சியர் கெரட் அகிரிப்பாவின் உதவியைப் பெற்றனராயினும் செறுநரை வெல்லவியலாதிருந்தனர். சமாதானம் விரும்பிய யூதரை எதிர்க்கட்சியார் கொன்றனராதலின் நீரோ கல்லஸ் என்னும் தலைவனைக் கலகநாசஞ் செய்யும்படி கற்பித்தனன். கல்லஸ் எரிசலம்நகர் கள்வர் மூர்க்கர்

வீரர் அபிமானிகள் உள்ளிட்ட கட்சியர் கையிலிருந்தமையால் அதன் மதிலை உடைக்க இயலாது திரும்பினான். கல்லஸ் தலைவனுக்குப் பதிலாக வெஸ்பாசியன் சென்றான். கி. பி. 68-ஆம் ஆண்டு வெஸ்பாசியஸ் யூதரின் அயலோரை அடக்கி நின்றுழி, நீரோ இறந்தானென்னக் கேள்விப்பட்டு, தனிக்கோலுரிமையைப்பெற எண்ணிச் சின்னாசியாவிலிருந்து புறப்பட்டான். இஞ்சி சூழ் எரிசலத்தைக்காவல்செய்த மூர்க்கர் தலைமைநடாத்திக் கலகம் விளைத்தனர். வெஸ்பாசியன் தனிக்கோலுரிமை பெற்றபின், வெஸ்பாசியன் மகன் றையிற்றஸ் எரிசலம்நகரைப் பம்பிப் பொருது சூழ்ந்துநின்றான். புறமதிலைக் கைப்பற்றியபின் நகர்வாயிலில் கொடும்போர்செய்து செறுநரை உழக்கி நகருட்புகுந்தான். உரோமர் எரிசலம் கோயிலையும் மாடமறுகுகளையும் இடித்துத் துகளாக்கித் தீயிட்டார். யூத சமயக்கிரியைகளையும் கொள்கைகளையும் முறைவகுக்கும் சமயக் கணக்கர் சங்கத்தையும் உரோமர் கலைத்தனர். யூதர் நகரழிந்தபின் உரோமர்நாடுகளெங்கும் பரவியும் தமது சிறப்பாசாரங்களை மறவாதிருந்தனர்.

## பிளாவியஸ் வெஸ்பாசியன் ஆட்சி கி. பி. 69—77.

கி. பி. 69-ஆம் ஆண்டு, புதியதோர் குடும்பம் தனிக்கோலுரிமைபெற்றது. றையிற்றஸ் பிளாவியஸ் வெஸ்பாசியானஸ் கட்சியுத்தமுடிவில் வெற்றிவேற்கை வேந்தனானான். வெஸ்பாசியஸ் அகஸ்தரது அரசியன்முறையைப் பெரிதும் தழுவினான். வெஸ்பாசியானஸ் சிறந்த குலத்தோனல்லனாயினும் படைத்தொழில் வல்லோனாகிப் படைத்தலைவனாக நியமிக்கப்பட்டான். வெஸ்பாசியானஸ் பிளேவியா டோமிற்றிலாவை மணம்புரிந்து றையிற்றஸ் டோமிசியானஸ் என்னும் இரு ஆண்மக்களையும் டோமிற்றில்லா என்னும் மகளையும் பெற்றான். தன் மனைவி துஞ்சியபின் வெஸ்பாசியன் கயினி என்னும் சுயாதீனம்பெற்ற அடிமை யொருத்தியோடு இல்லறம் நடத்தினான். இவ்வடிமைப்பெண் வெஸ்பாசியன் விவாகஞ்செய்யுமுன் அவனது காமக்கிழத்தியாயிருந்தவள். கி. பி. 70-ஆம் ஆண்டு வெஸ்பாசியன் உரோமாபுரத்துப் பழைய இல்லங்களை இடித்து, புது இல்லங்களைக் கட்டுவித்தான். தன் மூத்த

மகன் ரையிற்றஸ் என்போனை இளங்கோவாக்கி உரிமைகள் பல அளித்தான். மேன்மக்கட்சபையை அடக்குதற்குக் கீழ்மக்கட் காவலுரிமையும் இணைத்தலைமையுரிமையும் உரிமைக்கணக்குரிமையும் செலுத்திப் புதுமேன்மக்களைச் சபைக்கு அங்கத்தினராக்கினான். தனிக்கோல் கொடுங்கோலென உரைக்கும் எதிர்க்கட்சியரின் தலைவன் கோல்விடியஸ்பிறிஸ்கஸ் என்போனைச் சிரச்சேதஞ் செய்வித்தான். கயிக்கினுவின் கபடத்திற்கஞ்சி அவனையுங் கொல்வித்தான்.

வெஸ்பாசியனால் அமைக்கப்பட்ட புதுக்கோட்டங்களுள் சமாதானத்தேவதையின் கோயிலொன்று அழற்பட்டெரிந்தகாட்சி மண்டபத்திற்குப்பிரதியாக புதியதொன்று கட்டப்பட்டது. தலைவன் இத்தாலியரையே மெய்காப்பாளராக ஏற்படுத்தினான். கிரேக்கரைத் திறையளிக்கும்படி கற்பித்தான். கி. பி. 77-ஆம் ஆண்டு பாதியர் சிரியரோடு பொருதுனராக உரோமர்தலைவன் திராசானஸ் (Trajanus) அவர்களை அடக்கினான். வெஸ்பாசியானஸ் தனிக்கோலை நிலைநாட்டி 70 வயதினனாகி கி. பி. 77-ஆம் ஆண்டு இறந்தான். உரோமர் வெஸ்பாசியனுக்கும் கோவில்கட்டிப் பூசித்தனர்.

## ரையிற்றஸ் ஆட்சிக்காலம் கி. பி. 77—81.

ரையிற்றஸ் தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். ரையிற்றஸ் எரட் அகிரிப்பாவின் தங்கை பேசினியாவைக் காதலித்தான். குடிகள் அவள் யூதசாதியினளென்றும் அவ்விவாகம் தமக்கு வெறுப்பு விளைக்குமென்றும் காட்டினராதலின் அவளை யூடியா நாட்டிற்கு அனுப்பினான். ரைற்றஸ் தன்வண்மையால் சனங்களைத் தன்னை நேசிக்கப்பண்ணினான். பொதுசனங்களுக்கென நீராடும் மாடங்கள் பல அமைத்தான். அத்துடன் நூறுநாள் விழாநடத்திக் காட்சிகள் பல காட்டினான். அக்காட்சிகளில் 50000 விலங்குகள் கொல்லப்பட்டமையால் காட்சிகள் பல காட்டப்பட்டவையென்பது கூறுமலே அமையும். மணமுற்றத்தில் நீர்பாய்ச்சிக் கப்பற்போர் நடத்திக்காட்டிக் குடிகளை மிகவும் இன்புறுத்தினான். கி. பி. 80-ஆம் ஆண்டு உரோமாபுரத்தினொரு பகுதி தீப்பற்றியது. அதற்குமுன்

79-ஆம் ஆண்டில் வெசுவியஸ் எரிமலை எரிந்து பம்பியா கேர்க்கு லேனியம் என்னும் இரு நகரங்களைச் சாம்பலாக்கியது. அந் நிகழ்ச்சிக்கு நூலாசிரியன் இரண்டாவது பிளினி உடன்சான்று. பிளினி எரிமலை எரிந்தகாட்சியை அழகாக வர்ணித்தான். மேற் கூறிய இருநகரங்களும் மண்ணாலும் உருகிய கற்களாலும் சாம்பரா லும் மூடப்பட்டு 1900-ஆம் ஆண்டு ஆராய்ச்சிவல்லவரால் அகழப் பட்டன. உரோமருடைய வாழ்க்கையைச் சிறப்பித்துக்காட்டும் கலங்களும், கலைத்திறங்காட்டுஞ் சிலைகளும், இழைகளும், நுண் கைவினைஞரின் அருந்தொழில்வாய்ந்த அணிகளும் இந்நகரங்களின் மேல் அமைந்த மட்கண்டங்களில் அகழ்ந்தெடுக்கப்படுவன. கலன்கள் சிற்பச்சிலைகள் முதலியவை மட்கண்டத்தில் அழிவெய்தா வாகையால் பண்டைக்காலத்துப் பொருள்கள் பாதுகாக்கப்பட்டுப் பிற்காலத்தாரால் ஆராயப்படுகின்றன. இதுநிற்க, ரைபிற்றஸ் தன் வீண்செலவின்பயனைத் துய்த்தற்குமுன் கி. பி. 81-ஆம் ஆண்டு இறந்தான்.

## டோமீசியானஸ் ஆட்சி கி. பி. 81—96

விற்றேலியஸ் உரோமாபுரத்தைத் தாக்கியபொழுது டொமீ சியானஸ் நகர்நீங்கியோடி உயிர்பிழைத்தனன். தந்தை வெஸ்பா சியன் ரைபிற்றஸ் என்பவனுக்கு இளங்கோவிற்குரிய பல உரிமை களையுமளிக்க டொமீசியானஸ் தமையன்மீது அழுக்காறுற்றுத் தந்தையின் முன்னிலையை நீங்கிச் சிறியதோர் இல்லத்தில் வசித் தான். தமையன் தனிக்கோலனாகியும் தன்னை இளங்கோவாக்க வில்லையெனத் துயருற்றான். ரைபிற்றஸ் தன் மகளை மணம்புரியும் படி தன் தம்பி டொமீசியனைக் கேட்க, டொமீசியன் மறுத்தான். டொமீசியன் வேறோர் பெண்ணைக் காதலித்ததும் மறுத்ததற்கு ஓர் காரணமாகும். கி. பி. 80-ம் ஆண்டு தனிக்கோலுரிமை பெற் றான். மேன்மக்களுடைய உரிமைகள் யாவற்றையும் தான் கவர்ந் தான். தனது ஆட்சிக்காலம் முழுவதும் உரிமைக்கணக்கனாக அதிகாரஞ்செலுத்தி மேன்மக்களை அடக்கினான். பெரும்பாலும் இணைத்தலைமையுரிமையையும் உபயோகித்தான். மேன்மக்கட் சபையின் அங்கத்தினரைக் கொலைசெய்யும் ஆற்றல் தனிக்கோல ருக்கு இல்லையென மேன்மக்கட்சபை மொழிய, டொமிசியன் அவ்

வாற்றல் தனிக்கோலருக்கு உண்டென வற்புறுத்தினான். தனிக்கோலன் இரைபீரியனைப்போல் டொமிசியனும் நுண்ணறிவுடையோனாய் மேன்மக்களைப் பொருட்படுத்தாது தனிக்கோலோச்சினான். அவன் காவற்படைத்தலைவரின் ஆற்றலையும் மிகவிடாது காத்தான். வறியோருக்கு ஊணளித்தான். கி. பி. 88-ம் ஆண்டு அவனுக்கு விரோதியாகச் சற்றேணைஸ் எழுந்து கொல்லப்பட்டான். டொமிசியன் மக்கட்பேறின்மையால் துயருற்றான். மேன்மக்கள் தன்னைக் கொன்று அரசியலை நடத்த விரும்புவரென எண்ணித் தலைவர்களை ஒற்றரால் ஒற்றினான். இங்ஙனம் வெய்யோன் எனப் பெயர்பெற்றான். வரலாற்றாசிரியன் இரசிற்றஸ் டொமிசியனைக் கொடுங்கோலனெனக் கண்டித்தான். ஸ்ரோயிக்கர் என்னும் தத்துவஞானிகள் ஐம்புலவின்பத்தை வெறுத்து, கடமையைச்செய்தலே நல்லொழுக்கமென நம்பினர். அம்மதத்தோர் அரசியன்முறைகளுள் குடியரசே சிறந்ததெனஉபதேசித்தனராதலின், டொமிசியன் அத் தத்துவஞானிகள் யாவரையும் அரசவிரோதிகளென எண்ணி வருத்தினன். தன் மனைவி பரிஸ் என்னும் கூத்தனொருவனோடு கூடினள் என ஐயுற்று அவளைத் துறந்தான். குடியரசுக்கட்சியாரும் மேன்மக்களும் வெவ்வேறு காரணத்தால் தனிக்கோலனை வெறுத்தனர். கி. பி. 96-ம் ஆண்டு டொமிசியனை நேர்வா ஈட்டியாற்குத்த, டொமிசியன் அவனோடு மல்லுக்கட்ட, நேர்வாவின் கேள்வர் டொமிசியனைச் சூழ்ந்து கொன்றனர். மேன்மக்கட்சபை தனிக்கோலனின் மரணத்தைக் கொண்டாடவேண்டாமென அறிக்கையிட்டது. பிரேதத்தைத் தலைவருக்குரிய கிரியைகள்செய்யாது சுடுகாட்டிலிட்டனர். படைவீரர் டொமிசியனை நேசித்தனர். டொமிசியன் குடிகளைக் காத்தோம்பினான் என்பதில் ஐயமில்லை. அவன் தீயொழுக்கத்தையும் ஆசாரக்குறைவையும் கண்டித்தான். கி. பி. 83-ம் ஆண்டு வெஸ்தாத்தேவதையின் சாவினி ஒருத்தி கோர்ணிலியா என்பாள். கற்புநிலை வழுவினளெனச் சான்றுபெற்றமையினால் அவளை உயிரோடு புதைக்கும்படி கற்பித்தான். யூதர் கிறிஸ்தவர் முதலிய பிறமதத்தோரை டொமிசியன் துன்புறுத்தவில்லையாயினும் கீழ்த்தேசத் தெய்வவழிபாட்டைக் கண்டித்தான்.

## பிறநாட்டு வரலாறு.

வெஸ்பாஸிய பிளாவிய குடும்பத் தனிக்கோலருடைய காலத்தில் பிரித்தானியாவிலும் சர்மானியாவிலும் உரோமர் போர் புரிந்தனர். கி. பி. 70-ம் ஆண்டு கல்லியரை படக்கிய செறியாவிஸ் பிரித்தானியாத்தீவுசென்று பிரிகாந்திய சாதியரோடு பொருதான். கி. பி. 78-ம் ஆண்டு அக்கிரிக்கோலா படையெடுத்து மோனுச்சிறுதீவைக் கைப்பற்றி வடமேற்குப் பிரித்தானியரை அடக்கினான். கி. பி. 80-ம் ஆண்டு அவன் கலிடோனியநாட்டுச் சிலேட் ஆறுவரையுஞ் சென்று உரோமருடைய கழுகுக்கொடியை நாட்டினான். பின்னர் அயர்லாந்துத்தீவை ஆட்சிநாடாக்க எண்ணினான். தனிக்கோலன் டொமிசியஸ் உத்தரவு கொடாமையால் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. உரோமரது பூகோள நூலின்படி அயர்லாந்து ஐபீரியாவிற்கும் பிரித்தானியாவுக்கு மிடையிலுள்ளதாதலின் அந்நாடெங்கும் உரோமர் தமது ஆட்சியைச் செலுத்தவிரும்பினர். கி. பி. 83-ம் ஆண்டு அக்கிரிக்கோலா கலிடோனியநாடு புக்கான். கிருப்பியன்குன்றப்போரில் 10000 கலிடோனியர் மடிந்தனர். உரோமருள் 360 வீரர் மாத்திரம் இறந்தனர். கி. பி. 85-ம் ஆண்டு அக்கிரிக்கோலாவின் தலைமை முடிவெய்தியது. அக்கிரிக்கோலாவின் மருகன் இரசிற்றஸ் அவனுடைய வரலாற்றை எழுதினனுகையால் அவனைச் சிறந்த படைத்தலைவனெனப் புகழ்ந்தான்.

இனி, சர்மானியநாட்டுச் செய்திகளைச் செப்புவாம். டொமிசியன் சர்மானியரை உரோமநாடுகளுட் புகாமறறடுத்தற்கு றையின் ஆற்றுக்கரைமுதல் சர்மானியநாட்டு எல்லையீறாக ஒரு மண்மதில் அமைத்தான். இம்மதிலின்கண் இடையிடையே அமைக்கப்பட்ட காவலரண்கள் இன்றுங் காணக்கிடக்கின்றன. டொமிசியஸ் சர்மானியதேசத்திற்கு அயலான டேசியாநாட்டாரோடும் பொருதான். டேசியர் தானியூபி நதிக்கரையில் வாழ்ந்த ஒரு சர்மானிய சாதியார். டேசியர்தலைவன் டேக்கபாலன் பெரும் வீரன். அவன் உரோமருடைய பகைஞரான சேட்புலத்துப் பாதியரிடம் ஒற்றரையனுப்பித் துணைவேண்டினன். அன்றியும் நணியோரையும் நட்பாக்கிப் படைத்துணைபெற்றான். டேக்கபாலன் கானவராகிய டேசியரை யவன உரோம யுத்த முறைகளிலும் அரசியன் முறைகளிலும்

சனசமூகவாழ்க்கைத் திருத்தமுறைகளிலும் பழக்கினான். கி. பி. 85-ம் ஆண்டு சபினஸ் என்னும் உரோமர்தலைவனைக் கொன்றான். டொமிசியன் பஸ்கஸ் என்னுந் தலைவனைப் போர்நடத்தும்படி கற்பித்தான். பஸ்கஸ் தோல்வியடைந்து போர்க்களத்தில் மடிந்தான். பின்பு உரோமர்சேனாதிபதி யூலியன் தப்பாயிப்போரில் டெக்கபாலனை வென்றான். அக்காலத்தில் மக்கிறமேனியரோடும் உரோமர் போர்செய்தமையால், டெக்கபாலனோடு டொமிசியன் உடன்படிக்கை எழுதினான். இக்காலத்தில் டேசியநாடு உரோமேனியா என அழைக்கப்படுகிறது.

## கோக்கியஸ் நேர்வா ஆட்சிக்காலம். கி. பி. 96—99

விருத்தனாகையால் மேன்மக்கட்சபைக்கு அமைந்து ஒழுகுவானென எண்ணிக் கோக்கியஸ்நேர்வாவை தனிக்கோலைச் செலுத்தும்படி, மேன்மக்கள் தெரிந்தெடுத்தனர். நேர்வா மேன்மக்கட்சபையினரைக் கொலைக்குத் தீர்க்கவில்லையென வாக்களித்தான். டொமிசியனால் நாடுகடத்தப்பட்டோரை நாடுதிரும்பும்படி வரவழைத்தான். மிடிக்காலமாகலான், நேர்வா அரசிறைகளைக் குறைத்துப் பொருட்செலவில் மிகாமலுங் குறையாமலும் அளவொடு நின்றான். அவனுடைய ஆட்சியில் அரசியல் பிழையாது நாடு தழைத்தது. நேர்வா ஒவ்வொரு நகரிலும் பாடசாலைகளைக் கட்டி வறியபிள்ளைகளுக்குக் கல்விகற்பித்தான். டொமிசியனைக் கொன்றவரைப் பழிவாங்குதற்கு கல்பேணியஸ்கிருசஸ் சூழ்ச்சி செய்தானாகையால் நேர்வா தன்பின் செங்கோல் செலுத்தற்கு ஒருவனை நியமிக்கவிருந்தான். தனக்குக் குமாரரில்லாமையால் திராஜன் என்னும் படைத்தலைவனை இளங்கோ ஆக்கினான். கி. பி. 99-ல் நேர்வா மரிக்க, மேன்மக்கள் திராஜனைத் தனித்தலைவனாக்கினார்கள்.

## திராஜன் ஆட்சிக்காலம். கி. பி. 99—117.

திராஜன் ஐபீரியாக்குடாநாட்டிற் பிறந்துவளர்ந்த உரோமன். சர்மானியநாட்டில் படைத்தலைவனாகச் சேவித்துப் புகழ்பெற்றானாகையாலும் டேசியர்யுத்தத்திலும் சேவித்தானாகையாலும் பொதுச்சனங்களால் நேசிக்கப்பட்டான். தனிக்கோலுரிமைபெற்றவுடன் டேசியர் யுத்தத்தைத் தொடர்ந்தான். ஈண்டுச் சர்மானியரின் நாகரிகநிலையைப்பற்றி இாசிற்றஸ் எழுதிய வாலாறு நோக்கற்பாலது. சர்மானியர் வேடிக்கை விருப்பினரல்லர். வேளாண்மையும்

நிரைமேய்த்தலுமே அவர்களுடைய தொழில்கள். அவர்கள் சிறு குடிசைகளில் வாழ்ந்தனர். அரசாங்கத்தார் வயல்களையும் கமங்களையும் ஆண்டாண்டு வெவ்வேறு கமக்காரர்களுக்கு அளித்தனர். அங்ஙனம் ஆண்டாண்டு வயல்களை அளித்த நோக்கம் யாதெனின், செழிப்பான நிலங்களை யாவரும் பயன்படுத்தி நாட்டில் வறுமை செல்வம் மிகாமல் காத்தற்காகவே. சர்மாணியர் நகர வாழ்க்கையை அறிந்திலர். அவருடைய அரசியல்நடாத்துஞ் சபை நிறைநிலாவன்று கூடுதல் வழக்கம். நாட்டுத்தலைவர் யாவரும் தத்தம் சிறுபடைகளைப் பயிற்றி அவர்களைத் தம் குடிகளாகக் காத்தோம்பினர். சர்மாணியர் வேற்படை புரவிப்படைகளை நன்று பயிற்றினர்.

முதலாம் டேசிய யுத்தம் கி. பி. 101-ல் ஆரம்பமாகி 102-ல் முடிந்தது. டேசியரும் ஒரு சர்மாணியசாதியரெனினும் சர்மாணியரளவு சீர்திருத்தமடைந்தவரல்லர். திராஜன் டேசியர் நாடுபுக்கு சாமிகத்தூசா என்னும் தலைநகரை நோக்குவான், வழியிலுள்ள இருபிக்கலூரைக் கைப்பற்றினன். பின்னர் மாரிக்காலம் போர்செய்தற்குத் தகாதகாலமாகையால் திராஜன் திரும்பினன். இளவேனிற் காலத்தில் திராஜன் தலைநகரை முற்றுகையிட்டானாக, டேசியர் தலைவன் டெக்கபாலன் மதிலைக் காத்தற்கு வைத்த பொறிகளை அகற்றவும் திறைகொடுக்கவும் உடன்பட்டான். இரண்டாம் டேசியர் யுத்தம் கி. பி. 105-ல் நிகழ்ந்தது. டெக்கபாலன் உரோமரை வெல்லுதற்கு உபாயந்தேடி ஒற்றரைத் துணைப்படை சேர்க்கும்படி ஏவினன். தலைநகரை மிளையாலும் பொறியாலுங் காவற்படுத்தினன். திராஜன் டேசியதலைவனின் உட்பகையை அறிந்து டேசியாவை ஆட்சிநாடாக்க எண்ணினன். போர்தொடர்தற்குத் தானியூபிப்பேராற்றில் ஒரு பாலங் கட்டினன். பின்பு பெரும்படையோடு சென்று தலைநகரை முற்றுகையிட்டுத் தீயிட்டழித்தான். இவ்வெற்றியை நினைவுகூர்தற்கு 100 அடி உயரமான வெற்றித்தூண் ஒன்றை உரோமாபுரத்திலெழுப்பி டேசியப்போரைச் சுதையால் சித்திரித்தான்.

திராஜன் வெற்றிவேற்றடக்கையன், வரைமார்பன், திணிதோளன், கழுகுமூக்கினன், மறத்தொழிற்பிரியன் எனப் புகழப்

பட்டான். அவன் மேன்மக்கட்சபையினரோடு கலகஞ்செய்யாமல் ஒழுகினான். உரிமைக்கணக்கனாகத் தெரிவில் தெரியப்பட்டிலனாயி னும் அவ்வுரிமை தனக்கு இயற்கையாக உள்ளதெனவெண்ணி மேன்மக்கட்சபைக்குப் புதிய அங்கத்தினரை நியமித்தான். ஒருபாற்கோடாது நீதிசெலுத்தினன். பொருள்வருவாய்களை ஓம்பிப் பொருளை ஈட்டி வகுத்தலினும் ஊக்கமாகவிருந்தான். வறிய குடிகளுக்குக் கொடையளித்தான். கொடை சோம்பலுக்குக் காரணமாகையால் வரலாற்றுவல்லோர் கொடையளியைக் கூடா ஒழுக்கமெனக் கண்டிக்கிறார்கள். திராஜன் ஆட்சிநாடுகளை ஒறுத்து இத்தாலியநாட்டை ஓங்கப்பண்ணினான். வியாபாரத்தை விருத்தி செய்து சுங்கம்பெற்றுப் பொருள் ஈட்டினான். இத்தாலியாவில் அங்காடிகள் பல அமைத்தான். ஆட்சிநாடுகளைத் தேசாதிபதி களின் கொடுங்கோலினின்றுங் காத்தான். பிதினியர்நாட்டை மேன் மக்கட்சபை ஒறுத்து ஆண்டமையால் அதைத் தனிக்கோல னுடைய ஆட்சிநாடாக்கினான். எல்லா முயற்சிகளையும் மடியின்றித் தானாகவே கவனமெடுத்து நடத்தினான். கடிதங்களைத் தன் கையாலேயே எழுதினான். இரண்டாம் பிளினிக்குத் திராஜன் எழுதிய கடிதங்களும் அவனுக்குப் பிளினி எழுதிய கடிதங்களுங் கிடைக்கின்றன. பிதினியாவிலே பிளினி தேசாதிபதியாக அரசியல் நடாத்தியகாலத்தில் கிறீஸ்தவரைத் தான் தண்டிக்கவேண்டுமோ வெனக் கேட்க, கிறீஸ்தவர்களைத் தேடித் தண்டிக்கவேண்டாமென் றும் யாவராயினும் அவர்களைத் தீயோர் அரசவிரோதிகள் உரோம சமயவிரோதிக ளெனச் சான்றுகூறினால் விசாரணை செய்து தண்டிக்கவேண்டுமென்றும் திராஜன் விடையெழுதினான். இங்ஙனஞ் செங்கோலோச்சிய திராஜன் போர்ப்பிரியனாகையால் 115-ஆம் ஆண்டு ஆர்மினியாவை வென்று 116-ஆம் ஆண்டு பாதிய ரின் செருக்கையும் அடக்கினான். கி. பி. 117-ஆம் ஆண்டு சின் னாசியாவடைந்து பிணியாலிறந்தான்.

[தொடரும்]

ஸ்ரீ:

# மதிப்புரை.

ஸ்ரீவேங்கடேசுவர கீழ்த்திசைக்கலாநிலயப் பத்திரிகை (Annals of the Sri Venkateswara Oriental Institute):—இது திருப்பதியிலுள்ள ஷை நிலயத்தின் அரிய பெரிய ஆங்கிலவெளியீடாகும். கல்வித்துறையில் நீண்டகால அநுபவம் வாய்ந்து, அறிவாற்றலிற் சிறந்துவிளங்கும் ராவ்பஹதூர், K. V. ரேங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் இதன் ஆசிரியராயமர்ந்துள்ளனர். சென்ற மார்ச்சுமாதத்திற் றொடங்கப்பெற்று, இதன் முதற்றொகுதியின் முதற்பகுதி வெளி வந்திருக்கிறது.

நூலாராய்ச்சியிலும் சரித்திரவாராய்ச்சியிலும் ஒப்புயர்வற்ற பேரறிவாளர் பலர் இதற்குக் கட்டுரைகள் உதவியுள்ளார்கள். வடநாட்டிலும் தென்னாட்டிலுமுள்ள புலவர்பெருமக்களை ஒன்று சேர்த்து, அவர்கள் ஈட்டிய அறிவுச்செல்வமனைத்தையும் உலக முழுதும் பரவச்செய்வதற்கு இப்பத்திரிகை ஓர் உயரிய சாதன மாக அமையுமென்று தோன்றுகிறது. அன்றியும் இது, ஆரியம் திராவிடம் ஆகிய இருவகை மொழிகளுக்குமிடையே இக்காலம் தோன்றியுள்ள பெரும் பிளவை ஒருங்கு பொருத்தி, தாய்நாடு நன்னிலைபெறுதற்குத் தக்க தலைமைப்பணி புரியுமென்றும் நம்பப் படுகிறது.

இதிலுள்ள ஆராய்ச்சிகள் பெரும்பாலும் ஆங்கிலமொழியி லேயே வரையப்பட்டுள்ளன; ஆயினும், சிறுபான்மை தெலுங்கு மொழிப் பிரசுரங்களும் தேவநாகரிலிபியிலமைந்த ஸம்ஸ்க்ருதப் பிரசுரங்களும் இதிற் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

வடமொழியாராய்ச்சியைப்போலவே இப்பத்திரிகை தமிழா ராய்ச்சியிலும் தக்கவாறு கவனம்செலுத்தி, "வடசொற்கும் தென் சொற்கும் வரம்பா"கிய திருவேங்கடமுடையான் நல்லருளால் நாளுநாளும் வளர்ந்தேறவேண்டுமென்று மனமார வாழ்த்துவோமாக.

# அநுதாபக்குறிப்பு.

சென்ற ஏப்ரல்மீ 19-ஆம்உ 'பாஷாபாரதுரந்தர' 'மஹாமஹோபாத்தியாய' ஸ்ரீ.ம.வீ.இராமாநுஜாசாரியாரவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துத் திருநாடலங்கரித்தார் என்ற செய்தி தமிழ் மக்களை மாற்றொணாத்துயரில் மாழ்கச்செய்தது. தமிழ்நாட்டுப் பத்திரிகைகளெல்லாம் அவருடைய பிரிவாற்றாமையிற் புலம்பலுற்றுத் தம் அநுதாபத்தை வெளியிடுகின்றன.

ஸ்ரீ. இராமாநுஜாசாரியார் நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தோடும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தவர். அவர், இதன் அங்கத்தினருள் ஒருவராய் அமர்ந்து விளங்கினார்; வருடவிழாக்கூட்டங்களில் வந்திருந்து சிறப்பித்திருக்கிறார்; தனித்தமிழ்ப்பரீக்ஷைகளின் பரீக்ஷகராயிருந்தும் தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார்.

இவ்வாறே அவர் சென்னைச்சருவகலாசாலையிலும் தமிழ் சம்பந்தமான சபைகளில் அங்கத்தினராயிருந்துவந்தார். தமிழ் வித்துவான்பரீக்ஷைசபையில் தலைவராகவும் வீற்றிருந்து வேலை செய்தார்.

அன்றியும், அவர் பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்குப் பாடப்புத்தகங்கள் எழுதி உதவினார்; கல்லூரிமாணவர்களுக்கும் தமிழ்க்கல்வி புகட்டி நல்லாசிரியர்வரிசையிற் றலைசிறந்து விளங்கினார். அன்னாரிடம் பயிற்சிபெற்ற எத்தனையோபலர் இந்நாள் உயரிய பதவிகளில் உத்தியோகம் வகிக்கின்றனர்.

ஸ்ரீ. இராமாநுஜாசாரியாரை ஓர் ஒப்பரிய தமிழ்ப்புலவரென்று உலகம் போற்றுதற்கு இவ்வளவே போதியன என்னலாம். ஆயினும் லோகோபகாரமான அவருடைய அருமைபெருமைகள் இம்மட்டில் அடங்கிவிடவில்லை.

பாரததேசத்தின் அறிவுக்கருவூலமான ஸ்ரீமஹாபாரதத்தைத் தமிழ்மக்களும் எளிதாக எய்தி இன்பநுகரவேண்டுமென்ற

உந்நத லக்ஷ்யம் அவர் திருவுள்ளத்தில் நெடுநாளாக வேரூன்றிக் கிடந்தது. "முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும், பன்னு மாமொழிப் பாரதப்பெருமை" எங்கே? சில்வாழ்நாட் பல் பிணிச் சிற்றறிவுடைய தமிழ்வாணரின் எளிமைதான் எங்கே? எனினும் இரண்டற்குமிடையே வேற்றுமைமாற்றித் தமிழ்மக்களை ஈடேறச்செய்யும் அரிய பெரிய முயற்சியில் ஸ்ரீஇராமாநுஜாசாரியாருடைய எண்ணம் முனைந்துநின்றது.

இவ்வொப்புரவாண்மையை அவர் தம் வாழ்நாளின் கடைப்பிடியாக வரைந்துகொண்டார். இதனைக் குறைவற இயற்ற அவரிடம் ஊக்கமும் உழைப்பும் ஒருங்கு சிறந்தன; இடுக்கணழியாமையும் இன்றியமையாததாய்ப் பொருந்தியிருந்தது. ஆதலால் அவரது உயர்ந்த நோக்கமும் உருப்பெறலாயிற்று

ஆயினும், வடமொழிமுதனூலைத் தமிழ்வழிப்படுத்தும் முயற்சிக்கு உற்ற புலவர்துணையும் பொருட்டுணையும் போதிய அளவு வாய்க்கவில்லை. அதனால் அவர் தமக்கு எய்ப்பினில்வைப்பாய் நின்ற கைப்பொருளையும் இழக்க நேர்ந்தார்; மற்றும் பல இன்னல்களுக்கு ஆட்பட்டு வருந்தினர். அவையெல்லாம் "பன்னியுரைக்குங்கால் பாரதமாம்". ஆனாலும் என்? அவர் தம் விடாமுயற்சியினால் வெற்றிவீரராய்ச் சிறப்புற்று விளங்கினர். "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார், திண்ணிய ராகப் பெறின்" என்ற புகழுரை அவர்க்கும் பொருந்தியதாயிற்று.

இப் பெறலரும்பேற்றைத் தமிழ்மொழிக்களித்த பெருநன்றிக்குத்தக்க கைம்மாறும் உளதாமோ? 'பாஷாபாரததுரந்தர' 'மஹாமஹோபாத்தியாய' பட்டங்கள் அவரைத் தேடி அடைந்தன; சில தமிழன்பர் தம் சீரிய நன்கொடையால் அவருக்குப் பொருளுதவி புரிந்தனர். என்றாலும், இவையெல்லாம் நம் இராமாநுஜப்பெருந்தகையின் கைம்மாறுவேண்டாத கடப்பாட்டிற்கு எள்ளளவும் ஈடாவன அல்ல. இன்று அவர் பிரிவிற்கிரங்காத தமிழ்மக்கள்

இராமென்பது திண்ணம். உளரேல் அவர் தமிழராகாரென்பது சொல்லவும் வேண்டுமோ?

அவருடைய இன்முகமும், புன்னகையும், மென்மொழியும், சாந்தமே உருவுகொண்டாலனைய தோற்றப்பொலிவும் அன்பருள்ளத்தில் என்றும் அகலாது வதிகின்றன. புலவரைப் போற்றி நன்கு மதித்தலும், பலரோடும் அளவளாவிப் பயிலுதலும், சுற்றந்தழுவி ஆதரவளித்தலும் முதலிய நற்குணமெல்லாம் அவருக்குத் தனிச் சிறப்பாயமைந்தன என்னலாம். வாழ்க்கைநிலையும் ஒழுக்க நடையும், ஆடம்பரமின்றி எளிமையும் அருமையும் அவரிடை வாய்ந்து, பிறரும் மேற்கொண்டு பின்பற்றுமாறு அத்துணை முதன்மையுடையவாய்த் திகழ்ந்தன.

தமிழ்நாட்டின் தவப்பெரியார் இன்று நம் கண்முன்னின்றி மறைந்தனர். எனினும் அவருடைய அழியாத புகழுடம்பும் அகலாத பெருஞ்செல்வமான மஹாபாரதமொழிபெயர்ப்பும் என்றும் நீங்காது நிலைபெறுவனவாம்.